பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 28 | புதன்கிழமை | (15.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 300

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# சமாதான முயற்சியால் நாட்டிற்கு பேராபத்து!

## எச்சரிக்கிறார் அஸ்கிரிய பீடாதிபதி

(கண்டி)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளினால் நாடு பெரும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளது. இதனைத் தடுக்க நான் விரைந்து நடவடிக்கை எடுக்கப் போகின்றேன். இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி உடுகம் ஸ்ரீ புத்தரகித்த மகாநாயக்க தேரர் எச்சரித்துள்ளார்.**

கண்டியில் இடம் பெற்ற பௌத்த மத வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரகித்த மகாநாயக்க தேரர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அங்குஅவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்;

தற்போது நாட்டில் முன்னெடுக் கப்பட்டு வரும் சமாதான நடவடிக் கைகளினால் ஏற்படவுள்ள பேராபத் துக்கள குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் எதிர்ப்புக் கடிதம் ஒன்றை விரைவில் அனுப்பவுள் ளேன்.

எனது எதிர்ப்புக் கடிதத்தைய டுத்து (10ம் பக்கம் பார்க்க)

## டென்மார்க் அதிகாரிகளுடன் புலிகளின் பிரதிநிதிகள் சந்திப்பு!

(கோபன்ஹாகன்)

டென்மார்க்கிற்கு விஜயம் செய் துள்ள தமிழீழ விடுதலைப் புலிக ளின் பிரதிநிதிகளுக்கும், டென்மார்க் வெளிவிவகார அமைச்சு அதிகாரி களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போது விடுத லைப் புலிகளின் சார்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் தலை மையிலான குழுவினரும், டென் மார்க் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின ரும் கலந்து கொண்டனர்.

டென்மார்க் குழுவினருடனான நேற்றைய சந்திப்பை அடுத்து தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நோர்வே பயணமாகி யுள்ளனர். (ம)

## கனேடிய அமைச்சர் யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில்கிரஹெம் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங் கைக்கு வருகை தந்துள்ள அவர் யாழ்ப்பாணத்தில் கனடாவின் நிதியு தவியுடன் நடைபெறும் அபிவிருத் தித் திட்டங்களைப் பார்வையிடும் நோக்கிலேயே யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலி கள் சமாதான முயற்சியில் (10ம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் மீதான தாக்குதல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் வலம்புரி நிர்வாகத்திடம் உறுதி

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்தியில் கடந்த 11-ம் திகதி இடம் பெற்ற இராணுவ வாகனம் - ஓட்டோ விபத் துச் சம்பவத்தில் செய்தி சேகரிக் கச் சென்ற வலம்புரியின் செய்தி யாளர் கே.இதயபவன் இராணுவத் தினரால் தாக்கப்பட்டதுடன் இவர் வைததிருந்த பெறுமதிவாய்ந்த டிஜிற றல் கமராவும் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக நேற் றைய தினம் வலம்புரிப் பத்திரிகை யின் நிர்வாக உத்தியோகத்தர் பொ.இராசதுரை தலைமையிலான பிரதிநிதிகள் யாழ்.பொலிஸ் நிலைய அத்தியட்சகர் மற்றும் கண்காணிப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து நிலை மைகளை விளக்கிக் கூறியிருந்த னர்.

இச்சந்திப்பில் வலம்புரிச் செய் தியாளர் கே.இதயபவன் தாக்கப்பட் டது தொடர்பாகவும், அவர் வைத் திருந்த டிஜிற்றல் கமராவை இரா ணுவத்தினர் பறிமுதல் செய்தது தொடர்பாகவும் உரிய விசாரணை (10ம் பக்கம் பார்க்க)

## ஜஸ்வந்சிங்கா யாழ். வருகை

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டிருக்கும் இந்திய வெளி விவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கா யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்வாரென, இலங்கைக்கான இந் திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித துள்ளது.

அமைச்சரின் யாழ்ப்பாண விஜ யத்தின் போது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 'ஸ்கானர்' இயந்திரத்தையும், பஸ்வண்டி ஒன் றையும் அவர் வழங்குவாரென தூத ராலயம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## 1972-ல் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பித்த பின் தமிழரசுக் கட்சி இயங்கவில்லை

### பி.பி.ஸிக்கு ஆனந்தசங்கரி பேட்டி

(நமது நிருபர்)

1972-ம் ஆண்டு தமிழர் விடு தலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தமிழரசுக் கட்சி என்ற ஒரு கட்சி இயங்கவில்லை. தமிழரசுக் கட்சியையும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசையும் உள்ளடக் கியது தமிழர் விடுதலைக் கூட்டணி. இந்நிலையில் அக்கட்சியின் கூட் டத்தில் நான் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினரும் தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தலைவருமான வீ.ஆனந்த சங்கரி பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி யில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜாவின் யாழ்.நகர் காரியாலயத்தில் தமிழர சுக்கட்சிக்கு மீண்டும் புத்துயிர் அளித்து கட்சியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டம் தொடர் பாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பி.பி.ஸி க்கு அளித்த பேட்டியில் மேலும (10ம் பக்கம் பார்க்க)

## தமிழர் என்ற காரணத்தினாலேயே பொலிஸ்மா அதிபருக்கு சேவை நீடிப்பை வழங்கவில்லை

### ஜனாதிபதியைச் சாடுகிறார் அமைச்சர் மகேஸ்வரன்

(கொழும்பு)

தமிழர் என்ற காரணத்தினாலே பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந் தராஜாவின் பதவிக்காலத்தினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீடிக்கவில்லை. ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடு கண்டிக்கத் தக்கது என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தளபதி லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி தயாசந்தகிரி ஆகியோரின் பதவிக்காலத்தினை நீடித்த ஜனாதிபதி தமிழர் என்ற காரணத்தினால் ரி.ஈ.ஆனந்த ராஜாவின் பதவிக்காலத்தை நீடிக் கவில்லை என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் பதவிக் காலத்தினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீடிக்காமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலே (10ம் பக்கம் பார்க்க)

## குரங்குபாஞ்சான் முகாம்

## சிஹல உறுமயவின் பேரணியை இராணுவம் தடுத்து நிறுத்தியது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குரங்குபாஞ்சான் முகாம் பகுதியில் இருந்து விடுதலைப் புலி கள் உடனடியாக வெளியேற வேண்டுமென்று கோரி சிஹல உறு மயக் கட்சி நேற்று நடத்திய ஆர்ப் பாட்டப் பேரணியை இராணுவத்தி னர் சுரங்கல் முகாம் பகுதியில் இருந்து மேலும் முன்னேற விடாது திருப்பியனுப்பியுள்ளனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியைக் கைவி டுமாறு யுத்த நிறுத்தக் கண்காணி ப்புக்குழு, பாதுகாப்பு அமைச்சு ஆகி யன விடுத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காது சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணா ரட்ணா தலைமையில் விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை நோக்கி நேற்றுக் காலை கந்தளா யில் இருந்து ஆர்ப்பாட்டப்பேரணி ஆரம்பமானது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 30க்கும் அதிகமான பிக்கு கள் உட்பட பல நூற்றுக்கணக்கில் சிங்களப் பேரினவாதிகள் கலந்து (10ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இன்று பொங்குதமிழ் பெருந்திரளானோர் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் இன்று பேரெழுச்சியுடன் பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வினையொட்டி மன்னார் நகரப்பகுதியெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு ஒலிபெருக்கிகளில் எழுச்சிகீதம் இசைக்கவிடப்பட்டுள்ளது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு பொங்கு தமிழ்எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இதற்கு முன்னதாக மூன்று இடங்களில் இருந்து ஆரம்பமாகும் பேரணிகள், நிகழ்வு மைதானத்தை வந்தடைந்ததும் தேசியக் கொடி யேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமா கும்.

இதேவேளை, பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து பெருந்திரளானோர், மன்னாரில் கூடியுள்ளனர். (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டது

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கா.மகேஸ்வரி என்பவருடைய கடவுச்சீட்டு நல்லூர் ஆலயச் சூழலில் கண்டெடுக்கப்பட்டது. உரியவர் தகுந்த ஆதாரங்களை காட்டி கீழ்க்காணும் முகவரியில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும். ந.சிவகுமாரன் 34,முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/6743)


## குடாநாட்டில் இராணுவ ஆட்சியா இடம்பெறுகிறது? மக்கள் மத்தியில் ஐயுறவு எழுந்துள்ளது

### க.கா.குழு அரசியல் ஆலோசகரிடம் இளம்பரிதி எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில், பாதுகாப்பு



எனும் போர்வையில் புதிய காவலரண்கள் படையினரால் அமைக்கப்படுகின்றன. மக்களுக்கு பய, பீதியை ஏற்படுத்தும் வகையில் ரோந்து நடவடிக்கைகள் பரவலாக இடம்பெறுகின்றன.

புரிந்துணர்வு ஒப்பநதத்திற்கு மட்டுமன்றி சட்டத்திற்கே முரணான படையினரின் இந்த நடவடிக்கைகள், இராணுவ ஆட்சி இங்கு இடம்பெறுகிறதா என்று ஐயுறவை எமக்குத் தோற்றுவிக்கின்றது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அரசியல் ஆலோசகர் கயர் ஜோபர்ஸ்சுடனான சந்திப்பின் போது இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

யாழ். குடாநாட்டில் தற்போதைய நிலைவரம், இயல்பு வாழ்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், சகல அரசியல் கட்சிகளும் சுதந்திரமாகச் செயற்படுகின்றனவா என்பவற்றை ஆராய்தல் மற்றும் மக்களின் நிலைப்பாடுகள் ஆகியன குறித்து மாவட்டம் தோறும் சென்று, விடுதலைப் புலிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துவரும் கீயர் ஜோபர்ஸ், நேற றைய தினம் காலை 9 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து விடுதலைப் புலிகளைச் சந்தித்தார்.

இச் சந்திப்பில், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இளம்பரிதி அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

இராணுவ நெருக்கடிகளற்ற சுமுகமான சூழ்நிலையில் மக்கள் வாழ்வதற்கேற்ற வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

தற்போது குடாநாட்டில் 34 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் இராணுவம் நிலைகொண்டு, மக்களின் இயல்பு வாழ்வைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. இதனால்சுமார் 24 ஆயிரம் குடும்பங்கள் அகதிமுகாம்களில் அல்லற்பட்டு வருகின்றன.

இதைவிட, மீன்பிடித் தொழிலாளர்களின் நிலையோ மிகப் பரிதாபகரமாக உள்ளது. மாலையில் கடலுக்குச் சென்றவர் விடியற்காலையிலேயே திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம்.

இரவில் திரும்பும் மீனவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் விடியவிடிய கடலில் தடுத்து வைக்கப்படுகின்றனர். இதனால் பெறுமதி வாய்ந்த மீன்கள் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

இந்த நிலைமைகள் மாறி எமது கடலில் நாம் சுதந்திரமாக தொழில் செய்யும் நிலைமை ஏற்பட வேண்டும். முழத்திற்கு முழம் காணப்படும் காப்பரண்கள் அகற்றப்பட வேண்டும்.

தவிர, சமாதான செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கின்ற தென்னிலங்கை அரசியல் கட்சிகள் அடக்கி வாசிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இச்சந்திப்பை முடித்துக் கொண்டு, பத்திரிகையாளர்களைச் சந்தித்த கீயர் ஜோபர்ஸ்,

மக்களின் அபிலாசைகள் உள்ளிட்ட அனைவரது கருத்துக்களையும் அறியும் வகையில் நான் வடகிழக்கின் அனைத்து மாவட்டங்களிற்கும் சென்று வருகின்றேன். எமது செயற்பாடுகள் பற்றிய கணிப்பீட்டை மேற்கொள்ள இது நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

இங்கு அடிக்கடி இடம்பெறும் இராணுவ வாகன விபத்துக்கள், அதனாலுண்டாகும் பாதிப்புக்கள் ஆகியன பற்றி எமது மேலிடத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

இளம்பரிதி கூறிய கருத்துக்கள் எமது எதிர்கால செயற்பாட்டுக்கு பேருதவியாக இருக்கும் என நம்புகின்றேன் என்றார்.

இதேவேளை, நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த இவர், வியாழக்கிழமைவரை இங்கு தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்திக்க விருப்பதுடன், வியாழக்கிழமை கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் மேலிடத்தைச் சந்திக்க விருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## எதிர்ப்புப் போராட்டம

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி ஒன்றிணைந்த சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் இன்று எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

சுகாதார அமைச்சிற்கு முன்பாக நடைபெறவுள்ள இப்போராட்டத்தில சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களின் பிரச்சினைகள் பற்றிய மகஜர் சுகாதார அமைச்சரிடம் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இப்போராட்டம் நடைபெற்று இரண்டு வாரங்களுக்குள் சுகாதார அமைச்சர் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரா விட்டால் கடுமையான தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுக்க முடிவு செய்துள்ளதாக ஒன்றிணைந்த தொழிற் சங்கங்களின் சம்மேளனப் பேச்சாளர் ரவி குமுதீவ் தெரிவித்துள்ளார். (உ-63,10)

## போக்குவரத்துச் சபைத் தலைவர் யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் யு.எல்.எம். ஃபாருக் நாளை வியாழக்கிழமை நண்பகல் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் தலைமைக் காரியாலயத்துக்குச் செல்லவுள்ள இவர் அங்கு பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தவுள்ளார். (உ)

## தமிழீழக் கடற்பரப்பில் கடற்படையினர் தீவிர கண்காணிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு கடற்பிராந்தியத்தில் கடற்படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக முல்லைத்தீவு முதல் மட்டக்களப்பு வரையான ஆழ்கடற் பரப்பிலேயே இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தேவையான ஆயுதங்களுடன் கப்பல் ஒன்று இலங்கை நோக்கி வருவதாக வெளிநாட்டு செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதை அடுத்தே இந்தக் கடற் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-63,10)

## யாழ்-குடாநாட்டு ஓட்டோ சாரதிகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு ஓட்டோச் சாரதிகள் நேற்று முழுநாள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 11 ம் திகதி மாம்பழம் சந்தியில் இடம்பெற்றுள்ள இராணுவ வாகனம் ஓட்டோ விபத்தில் ஓட்டோச் சாரதியிலேயே முழுத் தவறும் எனத் தெரிவிக்கப்பட்டதைக் கண்டித்தும் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்துமே இப்போராட்டம் நடததப் பட்டது. (ந-7)

## இன்று வெள்ளைப்பிரம்பு தினம்

### ஏற்றம் இனிமைதரும்!

விழிப்புலன் இழந்து வாழ்வில்
விடியலை வேண்டி நிற்போர்
களிப்புடன் நாளும் வாழ
கருணையைக் கடலா யீவோம் !

வெள்ளைப் பிரம் பாலே
விழிப்புலனே இல்லை யென
தெள்ளெனவே காட்டி நிற்கும்
தெளிந்தசிந் தனை யள்ளும் !

கண்ணில் ஒளி யின்றிக்
கவலைக் கடல் மூழ்கும்
எண்ணிலா ஏந்தல் களின்
ஏற்றம் இனிமை தரும் !

அன்பெனும் ஆயு தத்தால்
அன்னவர் ஆதங் கத்தை
துன்பமே அணுகா வண்ணம்
துடைத்தலே தூய்மை யன்றோ !

மற்றையோர் வாழ்வி லென்றும்
மகத்தான இன்பம் காண
சற்றேனும் துயக்க மின்றி
சாதித்த லென்றும் நன்றே !

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்

### அக்டோபர்-15

விழிப்புல வலுவிழந்தோரின்
துணையான வெண்பிரம்பே !
அக்டோபர் மாதந்தன்னில்
வாழ்த்துகிறோம் வாழ்வகம் நாம்
என்றுமே நீ அவர்களின்
கரத்திலே தவழ்ந்திட
சர்வதேச வெண்பிரம்பு தினமான
இந்நாளில் வாழ்த்துகிறோம் வாழி !

~~~~\*~~~~\*~~~~

சர்வதேசமெங்கும் உள்ள விழிப்புல வலு இழந்தவர்களை பல்கலையும் கற்று பல்துறையிலும் வளர்ந்து பல்லாண்டு வாழ வாழ்வகம் வாழ்த்துகிறது.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

[7674] வாழ்வகம்.

## திருவெண்காடா ! சித்தி விநாயகா

பத்துத் தலை இராவணனின்
ஓர் சிரம் அழைந்த சிவபுமி ;
கடையிற் சுவாமி பொற்றாள்
நடம் புரிந்த புண்ணிய சிரபுரம்;
மண்டை தீ வெனும் திருத்தலத்தில்
திரு வெண் காடுறை சித்தி விநாயகன்
திருக் குளிர்த்தி காண
திருவுர் அடியார் மனங் குளிர
சேர்ந்த சங்காபிஷேகம் இன்று

விண்ணவரும், மண்ணவரும் வந்து
நின் கோயில் வாசல் வணங்கி
வேழ வண்ண முகங் கண்டேகும்
பெருந் தலமமைந்த சீர் பெருகும்
திரு வெண் காட்டதனில்
அருளாட்சி புரி சித்தி விநாயகன்
பால் வழிய அபிஷேகம் காணும்
புண்ணியத் திருநாள் இன்று

ஆண்டு தொண்ணூறில்
ஆறாயிரம் மேலுள்ளோர்
அடைக்கலம் நீ யென்று அண்டியுனை
சிரம் மேல் கையிருத்தி
திரு வெண்காடா !
சித்தி விநாயகா !
என்றிரு விழியும் நீர் சொரிந்து
இடர் களைய வாராயோ
என்றுன்னை அழைத்தக்கால்
அபயக் கரம் காட்டி ஆறுதல் செய்தவனே

ஐந்து கரத்தவனே
நின் கோயில் நெடிதுயர்ந்து
தலைத் தீவின் தலை மகன்
எங்கள் சித்தி விநாயகன்
நன்றே நடக் கருள் செய்
வேழ முகத்து மூஷிக வாகனனே!

யாதவகுலசிங்கம் துவாரகா

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று


ஓம் சிறீ சாயி ராம்

## "இசை அமுதம்"

பல்வகை இசைக் கருவிகளுடன் இனிய மாலை வேளையில் இனிய கானம்

**காலம்**

18.10.2003 சனிக்கிழமை
பி.ப. 4.00 - 6.00 மணி வரை

**இடம்**

சிறீ சத்திய சாயி சேவா நிலையம்
சேர் பொன். இராமநாதன் வீதி, (பல்கலைக் கழகம் முன்பாக)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**இசை வடிவம்**

கண்ணன் குழுவினர்

**இன்னிசைக் கீதம்**

இளைஞர் குழு

**நுழைவு இலவசம்**

அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்

இளைஞர் பிரிவு,
சிறீ சத்தியசாயி சேவா நிறுவனம்,
வட பிராந்தியம்.

[C/6744]
~~~~

# ஈராக்கின் மீள் கட்டமைப்புக்கான அமெரிக்கரின் புதிய திருத்தத் தீர்மானம்

## ஐரோப்பிய நாடுகளைத் திருப்திப்படுத்தும்

(நியூயோர்க்)

போருக்குப் பிந்திய ஈராக்கின் அரசியல் மீள் கட்டமைப்புக்கான திருத்தப்பட்ட வரைபுத் தீர்மானம் ஒன்றை அமெரிக்கா விநியோகிக்க ஆரம்பித்துத்துள்ளதாக நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்காவின் முன்னைய வரைபுத் தீர்மானம் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களின் கணிசமான ஆதரவைப் பெறத் தவறிவிட்டது.

லக்ஷம்பேர்க்கில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் ஒன்றில் பேசிய பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மக்ஸ்றோ ஈராக் தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கவலைகளைக் கவனத்தில் கொள்ளப் புதிய வரைபுத் தீர்மானம் முயற்சித்துள்ளது எனக் கூறியுள்ளார். இந்தத் தீர்மானம் முன்னேற்றத்தைக் காண்பிக்கும் என கூறிய பிரெஞ் வெளியுறவு அமைச்சர், ஆனால் ஈராக் நிலைமைகளுக்கு இதுபோதுமானதா என்பது கேள்விக்குறியாகும் என்றார்.

ஈராக்கில் உள்ள புதிய அரசாங்கத்திடம் அதிகாரங்களை விரிவாக மாற்றிக்கொடுக்க வேண்டும் என்று பிரான்சும் ஜேர்மனியும் கூறும் அதே வேளையில அதிகார மாற்றமானது. புதிய அரசியல் அமைப்பு மற்றும் தேர்தல் ஆகியவற்றை அடுத்தே அமையவேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டை பிரிட்டன் ஆதரித்துள்ளது.

இதனிடையே, லக்ஸம்பேர்க்கில் கூடி விவாதித்துவரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஒருகொடையாளி மாநாடு மூலமாக ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு உதவ ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது எனக் கூறியுள்ளனர்.

12முதல்18 மாதங்கள் வரை இதற்கான நிதி திரட்டும் பணி நடைபெறும் எனவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர். (பி-2)

## 70 ஆண்டுகளில் 10 தொன் மணலைச் சாப்பிட்ட மூதாட்டி

(ஹாங்காங்)

சீனாவின் வடக்கே யானிங் மாகாணம் ஜாங்குவா என்ற இடத்தில் 78 வயது மூதாட்டி கடந்த 70 ஆண்டுகளில் 10 தொன் மணலை சாப்பிட்டுள்ளார் என்று சீனா மார்னிங் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஹா பெங்க்லான் என்ற அந்த மூதாட்டிக்கு 8 வயதில் இருந்தே மண் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டது.

தினமும் ஒரு வேளையாவது மண் சாப்பிடாவிட்டால் ஏதோ உடல் நலக்குறைவு ஏற்பட்டது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படுகிறதாம்.

எழுபது ஆண்டுகளாக மண் சாப்பிட்டபோதிலும் இதுவரை அவருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை ல.

நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறாா என்கிறது அச்செய்தி. (பி)

## ஈராக்கில் படுகொலை முயற்சியில் இலக்கானவர் உயிர் தப்பினார்

(பாக்தாத்)

அமெரிக்கர்களால் நியமிக்கப்பட்டுள்ள ஈராக் நிர்வாக சபையின் உறுப்பினரான ஈராக் எண்ணெய்வளத்துறை அமைச்சர் இப்ராஹிம் அல் உலும் தன்மீது நடத்தப்படவிருந்த படுகொலைமுயற்சியில் இருந்து அவர் உயிர்தப்பியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 8 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். இது நடைபெற்று சில மணிநேரங்களில் அமைச்சர் இப்ராஹிம் அல்உலும் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதிலிருந்து அமைச்சர் காயங்கள் எதுவுமின்றி உயிர்தப்பினார்,

ஈராக்கிலுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டணியுடன் இணைந்து செயற்படும் ஈராக்கியர்கள் மீது அண்மைக்காலமாக தொடர்ந்து நடைபெற்றுவரும் தாக்குதல்களில் ஒன்றாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று ஈராக்கிய அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (பி-2)

## ஈராக்கின் விவகாரம் புஷ்ஷின் கையை மீறிப் போய்விட்டது

### அமெரிக்க எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

ஈராக் விவகாரம் அதிபர் ஜோர் புஷ்ஷின் கைகளை மீறிவிட்டது என்று அமெரிக்க நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புகார் கூறியுள்ளனர்.

செனற் சபையின் வெளியுறவுக் கமிட்டிக்கான உறுப்பினர்களாக இருக்கும் ஜனநாயகக் கட்சியினர் ஈராக் விவகாரம் அதிபர் புஷ்ஷின் கையை மீறிவிட்டது என்று கூறியுள்ளனர்.

ஈராக் விவகாரத்தில் அனைத்து உலக நாடுகளையும் கொண்ட உண்மையான கூட்டணியை அமைக்க புஷ் .தவறிவிட்டார் என்று அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட இருக்கும் ஜான் கொரி கூறினார்.

ஈராக் விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்ன எதிர்காலத் திட்டம் என்ன என்று புஷ் அரசு தெளிவுபடுத்தப்படவில்லை. அமைச்சர்கள் கொலின் பவலுக்கும டொனால்ட் றம்ஸ் பெல்ட்க்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. என்கிறார் டிக்லுக என்ற செனற் உறுப்பினர்.ஏன்.பி.சி தொலைக்காட்சியில் நேருக்குநேர் சந்திப்புக் கூட்டத்தில் அவர் இதைக் குறிப்பிட்டார்.

ரூபா 4இலட்சம் கோடி ஈராக் புனரமைப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூபா 4 இலட்சம் கோடியை ஒதுக்க புஷ்ஷின் ஆட்சி திட்டமிட்டுள்ளது. அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தாலும் இதுதொடர்பாக காரசார விவாதம் நடைபெறும் எனத் தெரிகிறது.

அதிபர் கேட்கும் ரூபா 4 இலட்சம் கோடி எங்களிடம் இப்போது இல்லை எனினும் அதனைத் திரட்டித்தர இயலும் என்கிறார் செனற் சபையின் புலனாய்வு கமிட்டியைச் சேர்ந்த ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ராக்பெல. (பி)



கரூரில் ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த கனமழையால் விஸ்வநாதபுரி அருகே குலையுடன் சாய்ந்த வாழை மரங்கள்.

உலக தரிசனம்

## மின்னல் தாக்கியதில் 11மாணவர்கள் பலி

### ஹொங்ஹொங்கில் சம்பவம்

மின்னல் தாக்கி 11 பாடசாலை மாணவர்கள் உடல்கருகி உயிரிழந்ததுடன் 85 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் ஹொங்ஹொங்கின் ப்ரஜாவில் நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

அதே வேளை, 200 மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்த வகுப்பறையே மின்னலினால் தாக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த மாணவர்களில் 25 பேர் கோமா நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மின்னல் தாக்கிய சமயம் மாணவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டனர் என்றும், கட்டடங்கள் எதுவும் சேதமடையவில்லையென்றும் ராய்டர் செய்திகள் கூறுகின்றன. (பி-2)

## சந்திரனில் நிலம் விற்கிறார் அவுஸ்ரேலியர் ஒருவர்

(மெல்போன்)

சந்திரனில் உள்ள நிலங்களை விலைக்கு விற்கத் தொடங்கிவிட்டார் அவுஸ்ரேலிய வியாபாரி ஒருவர்.

ஒரு ஏக்கர் நிலத்தின் விலை ரூபா 1800 தான்.

மெல்போன் நகரில் லூனார் ரியாலிட்டி என்ற ‘றியல் எஸ்டேட்’ நடத்திவருகிறார். பால் ஜாக்சன் என்பவர் சந்திரனில் நிலங்களை விற்கும் உரிமையை பெற்றுள்ளதாகவும் அவுஸ்ரேலிய உரிமையை அமெரிக்க வியாபாரி டெனிஸ்கோப் என்பவரிடம் இருந்து பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரனுக்கு ராக்கெற் அனுப்பத்தொடங்கிய காலத்தில் 1967 இல் ஐ.நா சபையில் ஓர் உடன்பாடு உருவானது. அதில் விண்வெளியில் எந்த இடத்திற்கும் எந்த நாடும் உரிமைகோர முடியாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. நாடுகளின் உரிமை குறித்து கூறப்பட்ட அதில் தனிநபர்களின் உரிமை குறித்து எதுவும் இடம்பெறவில்லை. (பி)



பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் கர்வா சௌத் எனப்படும் நோன்பு தினத்தை முன்னிட்டு, வண்ண வண்ண ஆடைகளை அணிந்து, கித்தா நாட்டியம் ஆடும் பெண்கள்.

## அயோத்தி செல்லும் பக்தர்களை தடுத்தால் வகுப்பு மோதல் ஏற்படும்

### விசுவ இந்து பரிசத் எச்சரிக்கை

(புதுடில்லி)

அயோத்தி நோக்கிச் செல்லும் இராம பக்தர்களை தடுத்து நிறுத்தினால் நாட்டில் வகுப்பு மோதல் உருவாகும் என்று விசுவ இந்து பரிசத் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக விசுவ இந்துப் பரிசத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான பிரவீன் றொகாடியா செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கூறியதாவது,

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ராமரை இம்மாதம் 17 ஆம் திகதி தரிசிக்கும் நோக்கில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் அயோத்தி நோக்கி சென்ற வண்ணம் உள்ளனர். இவர்களை தடுத்து நிறுத்த மத்திய அரசும் உத்திரப் பிரதேச மாநில அரசும் தீவிரம் காட்டி வருகின்றன.

இராம பக்தர்கள் அயோத்தி செல்வதை வாஜ்பாய் அரசு அனுமதிக்க வேண்டும் அவர்கள் ஸ்ரீராமரை அமைதியான முறையில் தரிசிக்க உத்திரப்பிரதேச முதல்வர் முலாயங் சிங் யாதவ் அனுமதிக்கவேண்டும், மாறாக இராம பக்தர்களை தடுத்து நிறுத்தும் முயற்சியில் மத்திய அரசோ அல்லது உத்திரப் பிரதேச அரசோ ஈடுபட்டால் நாட்டில் வகுப்பு மோதல் உருவாகும் இதற்கு பிரதமர் வாஜ்பாய்தான் பொறுப்பாவார்.

நான் மத்திய அரசை மிரட்டவில்லை தற்போதுள்ள நிலைமையைத்தான் எடுத்துச் சொல்கிறேன் இந்துக்கள் மீது நடத்தப்படும் எந்தத் தாக்குதலுக்கும் மத்திய அரசின் தலைவர் என்ற முறையில் பிரதமர்தான் பொறுப்பாளியாவார்.

அயோத்தி நோக்கி பயணம் மேற்கொண்டு வரும் பரிசத் தொண்டர்களை உத்திரப் பிரதேச அரசு தடுத்து நிறுத்தி வருகிறது இது வரை 10ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாடு சென்றுள்ள பிரதமர் வாஜ்பாய் புதுடில்லி திரும்பியும் இந்துக்கள் மீதான அடக்குமுறையை தடுத்து நறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வராமல் தடுக்கவும் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமையவும் முக்கிய பங்காற்றியது இராமர் ஆலய இயக்கம்தான். இதை எவரும் மறுத்துவிட முடியாது. இராம பக்தர்களை ஒதுக்க முற்பட்டால் வாஜ்பாய் அரசுக்கு தகுந்த நேரத்தில் நாங்கள் பாடம் கற்பிப்போம் என்றார்.

அயோத்திக்குச் செல்ல அரசியல் அமைப்பு சட்ட ரீதியாகவும் மதரீதியாகவும் இந்துக்களுக்கு உரிமை உள்ளது. ஏற்கனவே 3 இலட்சம் கிராமங்களைச் சேர்ந்த தொண்டர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு அயோத்திக்கு புறப்பட்டு விட்டனர்.

இராம பக்தர்களை தீவிரவாதிகளைப் போல கருதி உத்திரப் பிரதேச அரசு பாதுகாப்பிற்காக ஜம்மு காஷ்மீரிலுள்ள மத்திய றிசேவ் பொலிஸ் படையினரை வரவழைத்துள்ளது. இராம பக்தர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டால் கடும் விளைவுகள் ஏற்படும் என்றார் தொகாடியா. (பி)

### குடாநாட்டில் பணியாற்றும்

## இராணுவச் சாரதிகளுக்கும் மீண்டும் சாரதியப் பயிற்சி

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் பணியாற்றும் இராணுவச் சாரதிகளுக்கு மீண்டும் ஒரு தடவை விசேட சாரதியப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அண்மைக் காலங்களாக குடாநாட்டில் இடம்பெற்றுவரும் வாகன விபத்துக்களைக் கருத்தில் கொண்டு அதனைத் தடுக்கும் நோக்கிலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் கேணல சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், விபத்துக்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காகவும், எதிர்காலத்தில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் இராணுவத் தளபதி விசேட குழுவொன்றை நியமித்துள்ளார். இராணுவ உயர் அதிகாரிகள் அங்கம் வகிக்கும் இக்குழு வடபகுதிக்குச் சென்று விபத்துக்கள் தொடர்பான காரணங்களைக் கண்டறிய உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-60)

## மாணவர் கல்வி மேம்பாட்டுக்கு மக்கள் வங்கி அனுசரணை

(சங்கானை)

சங்கானைக் கல்விக்கோட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையும், இலவசக் கருத்தரங்கும் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையுடன் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளரது வழிப்படுத்தலில் சங்கானைக் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தால் நடாத்தப்படும் இவ் முன்னோடிப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடையும் முதல் 3 மாணவர்களுக்குத் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளதோடு, 100 புள்ளிகளுக்கு மேல் பெறும் சகல மாணவர்களுக்கும் சான்றிதழ்களையும், ஊக்குவிப்புப் பரிசில்களையும் சங்கானை மக்கள் வங்கி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-34)

### அடங்கமாட்டாங்கிறாங்களே இவங்க




### கூட்டணி பிளவுறும் அபாயம்!

# தமிழரசுக் கட்சிக்குப் புத்துயிரூட்டும் முயற்சிகள் முழு அளவில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லாமல் இருந்து வருவதன காரணமாக கூட்டணியின் பிரதான அரசியல் கட்சியாக இருந்து வந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச் செய்து தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றப் பாடுபட வேண்டிய உரிய தருணம் வந்துள்ளதால், அதனை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் துரிதமாக மேற்கொள்ளவேண்டும்.

எனக்கோரும் ஏகமனதான தீர்மானம் ஒன்று கடந்த ஞாயிறன்று யாழ்.மாட்டீன் வீதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் அலுவலகத்தில் நடைபெற்ற முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தமிழிரசுக்கட்சியின் ஆதரவாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினருமான சூ.சே.குலநாயகம் தலைமையில் நடைபெற்ற இம் முக்கிய கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா, வ.ஜ.தங்கவேல், பொ.கனகசபாபதி, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்களான சி.க.சிற்றம்பலம், எஸ்.சத்தியசீலன், கா.குகபாலன் உட்பட 75க்கும் மேற்பட்ட தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொருளாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா ஆற்றிய நீண்ட உரையில்,

தமிழர் விடுதலைக் கூட்டணியன் மாநாட்டினைக் கூட்டி கட்சியை புனரமைப்புச் செய்யும்படி பல அழுத்தங்களைக் கூட்டணி மட்டத்திலும் தலைவர்கள் மத்தியிலும் விடுத்திருந்த போதிலும்கூட, இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிககையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் நாம் எமது இனத்தின் அரசியல் ரீதியிலான போராட்டங்களை முன்னேடுத்துச்செல்ல வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் பிளவுகளை உருவாக்குவது எமது நோக்கமல்ல. கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற தமிழ்காங்கிரஸ் கட்சியானது அதன் செயற்பாடுகளைத் தனித்துவமாகச் செய்யும் போது தமிழரசுக் கட்சியினராகிய நாம் பார்த்துக்கொண்டிருக்க இயலாது.

தந்தை செல்வாவினால் கட்டி வளர்க்கப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியை அழிய விடுவது என்பது நாம் தந்தை செல்வாவுக்கு செய்யக் கூடிய பெரிய துரோகமாக அமையும். எனவே இன்றைய காலத்தின் தேவை கருதி, யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற தமிழரசுக் கட்சியின் அன்பர்களின் பெருவிருப்பப் பிரகாரம் அதனைப புனரமைப்புச் செய்து கொள்வோம் எனக் கூறினா.

மேலும் இக்கூட்டத்தில் பங்குபற்றியிருந்தவர்களில் பொரும்பான்மையினர் தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச் செய்ய வேண்டிய அவசியம், தேவை பற்றி வலியுறுத்தியிருந்தனர்.

அதனைத்தொடர்ந்து அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திலுள்ள தொகுதிகளில் கட்சியின் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல 15 பேர் கொண்ட இடைக்கால நடவடிக்கைக குழுவொன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் க.சச்சிதானந்தசிவம், மானிப்பாய் கே.பரமேஸ்வரலிங்கம், நல்லூர் க.யோகராசா, சாவகச்சேரி டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், வட்டுக்கோட்டை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தெல்லிப்பழை சிவமகாராஜா, கோப்பாய் சோ.கிருஸ்ணராஜா, உடுப்பிட்டி வீ.ஜீ.தங்கவேல், பருத்தித்துறை ஆர்.ராமண்ணா, ஊர்காவற்றுறை எஸ்.நடராஜா, கே.தர்மலிங்கம் ஆகியோர் தொகுதி அமைப்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைவிட சூ.சே.குலநாயகம், பொ.கனகசபாபதி, மாவை சேனாதிராஜா ஆகியோர் மாவட்ட மட்ட அமைப்பாளர்களாக பணிபரிவர் எனத் தெரியவருகின்றது.

இதன்பிரகாரம், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் கொண்ட முக்கிய மாநில மாநாடு இன்னமும் ஓரிரு மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

(உ-16)

சகல மருத்துவ துறையையும் சார்ந்த

**மருத்துவர்களே**

உங்கள் தொழில் சாதனைகளை நிலைநாட்ட
நீங்களும் கற்றுக்கொள்ளுங்கள்

**CLASSICAL ACUPUNCTURE**

**Specially, designed for general Practioners**
**WHO approved Syllabus**

எந்தவிதமான பரிசோதனைகளுமின்றி நோயாளியின் எந்த உறுப்பு பலவீனப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள

★ Pulse Diagnosis
★ நாடி பரிசோதனை

உங்கள் நோயாளர்கள் ஒரு சமயத்தில் கூறும் அனைத்து குணக் குறிகளுக்கும் காரணியை அகற்ற ஒரே புள்ளியை தேர்ந்தெடுத்து அதன் மூலம் சகல நோய்களையும் குணப்படுத்தலாம்.

★ Single Needle therapy
★ Five element theory

விரிவுரைகள் WHO அங்கீகாரம் பெற்ற சர்வதேச புகழ் இந்திய பேராசிரியரினால் நடத்தப்படும்.

ஒரு வகுப்பில் 30 பேரே சேர்த்துக்கொள்ளப்படுவர். பதிவுக்கு முந்துங்கள்.

திகதி, இடம், Course Fees போன்ற விபரங்களுக்கு 100. 00 ரூபா மணியோடருடன் தொடர்புகொள்ளவும்.

The Chairman
The Foundation for higher Education & Research
88/2, Dunbar Road, Hatton.
Tel: 051-2222078, 077-7754108
E-mail: drshanth@sltnet.lk

(7673)

## கிராமிய விளையாட்டுக் கழகங்களை புனரமைப்பது இன்றைய காலத்தின் தேவை

### யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்

(காரைநகர்)

கிராமிய மட்டங்களிலுள்ள விளையாட்டுக் கழகங்களை புனரமைப்பதன் மூலமே இலைமறைகாயாக உள்ள விளையாட்டு வீரர்களை இனம்காணமுடியும் இதன்மூலம் மாவட்ட , மாகாண, தேசிய மட்ட போட்டிகளுக்கு திறமையான வீரர்களைத் தெரிவுசெய்ய முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வீ.மாதுளன்.

அண்மையில் இடம்பெற்ற காரைநகர் பிரதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வீ.மாதுளன் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

யாழ்.மாவட்டத்தில் தற்போது பிரதேச ரீதியாக விளையாட்டுக் கழகங்கள் புனரமைக்கப்பட்டுவருகின்றன.அத்துடன் பிரதேச ரீதியாக விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவும் அமைக்கப்பட்டுவருகின்றது. அந்த வகையில் காரைநகரிலும் புதிதாக ஆரம்பிக்கப்படும் விளையாட்டுக் கழகங்கள் அனைத்தும் புனரமைக்கப்படல் வேண்டும்.

கிராமிய மட்ட விளையாட்டு வீரர்களின் திறமையை இனம்காண்பதற்காக விளையாாட்டுக்கழகங்களிடையே விளையாட்டுப் போடட்டிகள் நடாத்தப்படவிருக்கின்றன.

இதன்மூலம் இலைமறைகாய் போல உள்ள வீரர்களின் திறமையை கண்டுகொண்டு அவர்களை மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற வைக்க முடியும் என்பதுடன், இதற்கு அனைத்துத் தரப்பினரும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில், காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் மற்றும் விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(பி-246)

## மூவி மெண்டோ உதவி

(பன்னாலை)

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அளவெட்டி வடக்கு மற்றும் அளவெட்டி மத்தி கிராம அலுவலர் பிரிவுகளில் வசித்து வரும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு மூவிமெண்டோ நிறுவனம் விதை நெல், அடிக்கட்டுப் பசளை மற்றும் மண்வெட்டி ஆகிய விவசாய உதவு பொருட்களை வழங்கி வருகின்றது.

(உ-32)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 36

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர்கள் பெயர் விபரம் வருமாறு:**

01. சி. மயூரதன்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
02. க. அகிலன்- வரணி மகாவித்தியாலயம்
03. வே. தினோசினி- வரணி மகாவித்தியாலயம்
04. கு. செந்துசாயினி- வரணி மகாவித்தியாலயம்
05. கி. சுதாயினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
06. அ. ராஜ்ஹரன்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
07. இ. அனோஜிதா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
08. த. நீருஜா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
09. வே. பானுஷா- வரணி மகாவித்தியாலயம்
10. தே. துசாந்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
11. க. சுதர்சனா- வரணி மகாவித்தியாலயம்
12. சி. சுஜீபா- வட இந்து மகளிர் கல்லூரி
13. பா. லோஜன்- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
14. ம. சிவறோஷன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
15. இ. டன்சிகா- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
16. பி. யோபிகா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
17. ம. நிரூபன்- வல்வை சிவகுரு வித்தியாசாலை
18. சி. காயத்திரி- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
19. கு. விஜிதா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
20. பி. நந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
21. ர. நிரூபன்- வரணி மகாவித்தியாலயம்
22. கி. காவேரி- யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
23. பா. சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
24. ந. பரந்தாமன்- வல்வை சிவகுரு வித்தியாசாலை
25. சி. துவாரகா- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
26. ஞா. பிருந்தாவனன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
27. தி துவாரகன்- தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
28. க. கோபிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
29. கி. சதீஸ்குமார்- வரணி மகாவித்தியாலயம்
30. அ. துவாரகன்- வரணி மகாவித்தியாலயம்
31. ம. சரண்யா- சுன்னாகம் நாவலர் வித்தியாசாலை
32. யோ. நிசாந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
33. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
34. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
35. சி. துவாரகன்- வரணி மகாவித்தியாலயம்
36. கோ. வினோதினி- வரணி மகாவித்தியாலயம்
37. இ. அனுஷா- கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்
38. அ. தவக்குமார்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
39. சு. ரேசிஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
40. பூ. திலக்ஷி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
41. சி .பிரியவருண்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
42. ம. லங்கேசன்- நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை
43. ச. ஜயகணேஷ்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
44. கி. தீபிகா- இணுவில் இந்துக் கல்லூரி
45. மு. பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
46. க. நிரோஜன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
47. க. உஷாந்தன்- வரணி மகாவித்தியாலயம்
48. ஜெ. லக்ஷி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
49. ம. கீர்த்திகன்- இணுவில் மத்திய கல்லூரி
50. பே. மகிழ்ரதி- கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்
51. ர. சாம்பவி- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
52. ச. அருண்- இணுவில் மத்திய கல்லூரி
53. அ. பவித்திரா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
54. கு. சரண்யா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
55. த. தனுசியா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
56. சி. நிலக்சன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
57. ச. திவிஜன்- உடுவில் மகளிர் கல்லூரி
58. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
59. ஜெ. சயந்தன்- வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
60. எஸ். விசாகரன்- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
61. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
62. ஞா. தாரணி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
63. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
64. த. சிவாகர்- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
65. ச. நிஷாங்கினி- யா/ புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்
66. ச. ஜெயபாரதி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
67. க. மோகனன்- வரணி மகாவித்தியாலயம்
68. கு. சஞ்சிகா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
69. ஜெ. சங்கீதா- ய்ா/ இந்து ஆரம்பப் பாடசாலை
70. ஆ. நிரோஜினி- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
71. பு. லதுஷா- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
72. க. சிந்துஜன்- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
73. ச. ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலை
74. த. அகர்சனன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
75. ப. சுகீர்த்தனா- தேவரையாளி இந்துக் கல்லூரி
76. க. விபிஜா- ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை
77. ம. துவாரகன்- உடுவில் மகளிர் கல்லூரி
78. சி. சிவசங்கரநாராயணன்- இணுவில் மத்திய கல்லூரி
79. து. விக்னேஸ்வரன்- நயினை நாகபூசணி வித்தியாலயம்
80. இ. பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி
81. ஜெ. ஸஜீபன்- ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை
82. ம. சரண்யா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
83. சி. தர்சிகா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
84. சி. ஜஜிதா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
85. லி. கரூஷன்- இணுவில் மத்திய கல்லூரி
86. நா. சாம்பவி- வரணி மகாவித்தியாலயம்
87. சி. ஜோதிகா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
88. சி. ஜெதீசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
89. சி. அருண்குமார்- வதிரி திரு இருதயக் கல்லூரி
90. சா. மதுறமி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
91. பி. ஜோதிகா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
92. இ. றூபதர்சினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
93. இ. கோபிகிருஷ்ணன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
94. க. செல்வி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
95. ர. யதுர்சன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
96. சி. கெஜரூபன்- தாவடி இ.த.க.பாடசாலை
97. வே.. சரண்யா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
98. ச. சோபிகா- துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
99. செ. ராஜ்குமரன்- சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை
100. யோ. பிரிந்தா- வரணி மகாவித்தியாலயம்
101. ச. செரினா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
102. தி. கஜிதா- வரணி மகாவித்தியாலயம்
103. ந. தரிசன்- வரணி மகாவித்தியாலயம்
104. நா. சதீஸ்குமார்- வரணி மகாவித்தியாலயம்
105. தெ. லவன்யா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
106. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
107. கி. பிரசன்னா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
108. அ. அகல்யா- சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலை
109. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
110. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
111. தி. உமாசங்கரி- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
112. பு. உஷ்சாந்தி- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
113. மோ. சித்திராங்கன்- தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
114. சி. மதுசன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
115. ம. அபிவர்ஷனி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
116. சா. ஆதவன்- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
117. கு. சௌபிகா- அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்
118. கீ. அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
119. வி. சஜீபன்- சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்
120. ச. சாந்தீபன்- வட்டு.காத்திகேய வித்தியாலயம்
121. சு. குபேனுஷா- யா/ புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்
122. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
123. இ. நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
124. வே. செந்தூரன்- வரணி மகாவித்தியாலயம்
125. பி. அபிசுஜா- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
126. மோ. சோதீபன்- மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
127. கி. கஜரூபி- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
128. சி. டினோஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
129. செ. கலிஸ்ரா- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை
130. ச. சர்மிஜா- சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை
131. த. தபோஜனன்- இணுவில் மத்திய கல்லூரி
132. சி. சிறிவிந்துஜன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
133. ச. நந்துஜா-யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
134. சி. சுகனியா- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
135. த. ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
136. நா. தேனுயா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
137. ஜெ. நிரோஜினா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
138. க. புவிதாயினி- வரணி மகாவித்தியாலயம்
139. க. கரிசினி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
140. செ. ஆருணன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
141. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
142. அ. ஜனதன்- யா/ பரியோவான் கல்லூரி
143. சி. சிந்துஜன்- தாவடி இ.த.க.பாசாலை
144. செ. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
145. அ. பிறேமி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
146. பா. கிறிஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
147. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை
148. கே. பவப்பிரியசர்மா- இணுவில் மத்திய கல்லூரி
149. இ. கிரிசாந்- யா/மத்திய கல்லூரி
150 சி. கௌதமி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
151. நீ. நிறூயினி- யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்
152. க. நிலாம்பிகா- வரணி மகாவித்தியாலயம்
153. சு துளசிகா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
154. வே. நீருஜன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
155. ந. ஸ்ரீபதிசர்மா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
156. த. விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
157. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
158. த. சிவதாஸ்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
159. நே. லாவன்ஜன்- தாவடி இ.த.க. பாடசாலை
160. ந. துஷ்யந்தன்- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
161. தி. ஜெயந்தி- அச்சுவேலி மத்திய கல்லூரி
162. செ. றகீம்டீநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
163. ச. அனுஷா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
164. அ. கனிஷ்ரா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
165. இ. சுதர்சினி- வரணி மகாவித்தியாலயம்
166. ஜெ. கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
167. தி. லக்ஷாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
168. க. நிரோஜினி- அல்வாய் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்
169. ச. சர்மிலன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
170. ச. சர்மிளா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
171. ச. அனுஷா- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலை
172. செ. அருள்ராஜ்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
173. ர. ராஜ்மோகன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
174. சி. வாதுசா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
175. க. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
176. யோ. வெசின்ரன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
177. நா. நாளாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
178. இ. நிரோஜ்குமார்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
179. க. தனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
180. மா. ஸ்ரெலா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
181. செ. அருணன்- மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்
182. ம. சிறோமியா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
183. சி. வர்ணன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
184. யோ. சிந்துயா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
185. கு. நிரோஜன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
186. க. நிறோசன்- சுன்னாகம் திருஞான்சம்பந்த வித்தியாசாலை

## வினாத்தாள் 36-ன் விடைகள்

01. ஏழையின் கண்ணீர்
02. போதாத உணவு
03. பிச்சை எடுத்தல்
04. ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொது
05. ஒரு தொழிலும் தெரியாதவர்
06. உழைப்பாளிகள்
07. உணவு,உடை,உறையுள்
08. அல்லும் பகலும்
09. எத்தனையோ
10. சூரியனைக் கண்டபனிபோல
11. ஊதியம்/சம்பளம்
12. வருமானம்
13. வசிப்பிடம்
14. பசுமை/மலர்ச்சி
15. வீடுகளும் நாடுகளும்
16. அரசாங்கங்கள்
17. வாய்ப்புக்கள்
18. வேலைகள்
19. 100/-
20. 10.00/-
21. 16
22. 4
23. 111.50
24. மாம்பழங்களும்,அப்பிளும்
25. அப்பிள்-2, மாம்பழம்-3, தோடம்பழம்-2
26. தோடம்பழம், அப்பிள்
27. தோடம்பழம், எலுமிச்சம்பழம்
28. **Apple**
29. **Orange**
30. **Mango**
31. **Lime**
32. கடை
33. தேங்காய்
34. ரூபா
35. விலை
36. தொலைக்காட்சிப்பெட்டி
37. சூரியக்கலம்
38. யூரியா
39. மின்னடுப்பு
40. வெப்பமானி
41. நெருஞ்சி
42. பால்
43. குறிஞ்சா
44. வயலின்
45. இழைகளை அதிரச் செய்ய வேண்டும்
46. (1)
47. தொழிற்பாடல்
48. கதைப்பாடல்
49. தாலாட்டுப்பாடல்
50. கும்மிப்பாடல்
51. (1) 52. (2)
53. (2) 54. (2)
55. (1) 56. (3)
57. (1) 58. (2)
59. காற்பந்து
60 பனிச்சறுக்கல்
61. துடுப்பாட்டம்
62. கொக்கி
63. பூப்பந்தாட்டம்
64. சிவப்பு ஒளி
65. செம்மஞ்சள் ஒளி
66. பச்சை ஒளி
67. சிவப்புச்சிலுவை
68. மஞ்சள் கோடு
69. சிறுநீரகம்/தோல்/சுவாசப்பை
70. இரைப்பை
71. நுரையீரல்கள்
72. இதயம்
73. மாபிள்க் கோளம்
74. இரும்பு வளையம்
75. கோளம் கீழே விழும்

76.-81 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக்குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

# மாதகல் மீனவர்கள் தமது வீடுகளை பார்வையிட படைத்தரப்பு அனுமதி

(வடலியடைப்பு)

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள மாதகல் பிரதேசத்தில் உள்ள மீனவர்களின் வீடுகளைப் பார்வையிடுவதற்கும், அத்தியாவசியப்பொருட்களை அங்கிருந்து எடுத்துச் செல்வதற்கும் கடற்படையினர் அனுமதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி, மாதகல் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று வருவதற்கு வீட்டு உரிமையாளர்களான மேற்படி மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

இதனால் பல சிரமங்களை மீனவர்கள் எதிர்நோக்கி வருவது பற்றி இப்பகுதிக் கடற்படை அதிகாரி றுவான் பெரேராவுக்கும் தெரியப்படுத்தியதையடுத்து, சம்பந்தப்பட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

மேற்படி கலந்துரையாடலின் போதே மீனவர்கள் தமது சொந்த வீடுகளுக்குச் சென்று வரவும், அங்கிருந்து அத்தியாவசியப் பொருடகளை எடுத்துச் செல்லவும் கடற்படை அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இப்பகுதி மீனவர்கள் தொழில் செய்வதில் எதிர்நோக்கி வந்த இடையூறுகள் சிலவற்றிற்கும் தீர்வு கிட்டும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-21)

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 38 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

★ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**தொகுதி I**

பொன் வெய்யில் துள்ளுது
பொழிலினிலே
புதுமலர் விரியுது
பொய்கையிலே
புன்னைத் தேனைப் பருகிய வண்டின்
போதை பேசுது கேள்
தென்னா! தென்னா!

காக்கை கரையுது
கா! கா! கா!
சோலை இளங்குயில்
அக் கூ! கூ!
மந்தை எருமை மருவிலழுந்தி
மந்திர மோதுதடா
ம் மா! ம் மா!

**தொகுதி II**

நிலவொளி துள்ளுது
நிழலூடே
நெருப்பென மின்மினி
இருளூடே
வௌவால் சிறகில் ஏறிய காற்று
வண்ணம் பாடுதுகேள்
ஓஹோ! ஓஹோ!

தவளை முனகுது
''ஞான நம ணோம்''
குவளை மலர்ந்தது
ததிங்கிணதோம்
கொட்டும் நிலவைக் குடித்த வெறியில்
கூகை கூவுது கேள்
கூஹீ ! கூஹீ !

★ இப்பாடல்கள் இரு வேறுபட்ட நேரத்துக் காட்சிகளை விபரிக்கின்றன. அக்கால வேளைகளை எழுதுக?

01. தொகுதி I ..........
02. தொகுதி II..........
03. நீர் வினா ஒன்றில் குறிப்பிட்ட வேளையுடன் தொடர்புடைய பறவைகள் எவை?
..........
04: நீர் வினா இரண்டில் குறிப்பிட்ட வேளையுடன் தொடர்புபட்டுள்ள அங்கிகளின் பெயர்களை எழுதுக? ..........
05. தொகுதி I பாடலில் ஒளிக்கும் காரணமாக இருந்ததையும், தொகுதி II பாடலில் ஒளிக்கு காரணமாக இருந்ததையும் எழுதுக.
தொகுதி I.......... தொகுதி II..........

★ பாடலில் உள்ள சில சொற்கள் கீழே தரப்படுகின்றன. இவற்றின் சரியான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

06. மலர்.......... 07. காக்கை..........
08. நிலவு.......... 09. காற்று..........
10. தவளை.......... 11. ஒளி..........

★ மேலே உள்ள பாடலில் உள்ள அங்கிகளின் பெயர்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

12. ஈருடகவாழி.......... 13. நகரச் சுத்திகரிப்பான்..........
14. பறக்கும் முலையூட்டி.......... 15. ஒளியுடைய பூச்சி..........

★ கீழ்வரும் சொற்களின் ஒத்தகருத்துடைய சொற்களைத் தருக.

16. பொய்கை.......... 17. குவளை..........

★ கீழ்வரும் சொற்களின் எதிர்க்கருத்துடைய சொற்களைத் தருக.


18. விரியுது.......... 19. மலர்ந்தது..........
20. கீழ்வரும் அங்கிகளின் ஒலிக்குறிப்புக்களை எழுதுக.
காகம்.......... குயில்..........

★ கீழ்வரும் விலைப்பட்டியலை அவதானித்து அதனைத் தொடர்ந்து தரப்படும் வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| அரிசி 1 கிலோ கிராம் | ரூபா 36.00 |
| தேங்காயெண்ணெய் 500ml | ரூபா 32.00 |
| தீப்பெட்டிகள் 3 | ரூபா 7.50 |
| சவர்க்காரம் 1 கட்டி | ரூபா 13.25 |
| பணிஸ் 1 சோடி | ரூபா 6.25 |
| 1 தோடம்பழம் | ரூபா 32.00 |
| பென்சில் 3 | ரூபா 15.00 |
| தேயிலை 100 கிராம் | ரூபா 12.00 |
| சோடாப் போத்தல் | ரூபா 80.00 |
| சலன்சர் துணி 1 மீற்றர் | ரூபா 75.00 |
| பப்பிளீன் துணி 1 மீற்றர் | ரூபா 55.00 |

21. 400ml தேங்காயெண்ணையின் விலை என்ன?
ரூபா.......... சதம்..........
22. ஒரு டசின் தீப்பெட்டியின் விலை எவ்வளவு?
ரூபா.......... சதம்..........
23. 2கிலோ கிறாம் 750 கிராம் அரிசின் விலை?
ரூபா.......... சதம்..........
24. 2.25m சலன்சர் துணி, 8m பப்ளீன் துணி, 4 சோடாப் போத்தல், 2டசின் பென்சில் ஆகியவற்றை வாங்கும் ஒருவர் கொடுக்கவேண்டிய பணம் எவ்வளவு?
ரூபா.......... சதம்..........
25. 5 சோடி பணிஸ், 500ml தேங்காயெண்ணெய்ப் போத்தல்கள் 4, தோடம்பழம் 6, தேயிலை 750கிராம் ஆகியவற்றை வாங்கிவிட்டு ரூபா 500 தாள் ஒன்றினைக் கொடுக்கும் ஒருவருக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
ரூபா.......... சதம்..........

★ கீழே தரப்பட்டுள்ள வரைபை நன்கு அவதானிக்குக. இது வியாபாரி ஒருவர் ஒவ்வொரு நாளும் தன் உழைப்பில் சேமிப்பில் இட்ட பணத்தொகையை விபரிக்கின்றது. இதை விளங்கிக் கொண்டு விடை எழுதுக.






26. சேமிப்பு உச்சமாக இருந்த நாள் எது?
..........
27. சேமிப்பு மிகவும் குறைவாக இருந்த நாள் எது?
..........
28. இரண்டு நாட்கள் சேமிக்கப்பட்ட பணம் சமமாக உள்ளது. இந்த இரு நாட்களும் எவை?
..........
29. குறித்த ஒரு நாளில் அவர் பணம் எதனையும் வைப்பில் இடவில்லை. அந்த நாள் எது?
..........
30. இவ்வாரம் அவர் வைப்பில் இட்ட தொகை எவ்வளவு?
..........

★ கீழ்வருவனவற்றை அவற்றின் குறியீடுகளுடன் எழுதுக?

31. 100 கிலோக்கிராம்.......... 32. 54 கிராம்..........
33. 50 மில்லி லீற்றர்.......... 34. 15 சென்ரிமீற்றர்..........

★ கீழ்வரும் தரவுகளைக் கொண்டு பொருத்தமான முடிவை கோட்டுக்குள் எழுதுக.

| | பரிசோதனை | அவதானிப்பு | முடிவு |
|---|---|---|---|
| 35. |  | மெழுகுதிரி சிறிது நேரத்தில் அணைந்தது | |
| 36. |  | கரண்டி முறிவடைந்தது போல் தோன்றியது | |
| 37. |  கண் | கண்ணுக்கு மெழுகுதிரி எரிவது குழாய் ஊடாகத் தெரியவில்லை. | |
| 38. |  நூல் | மின்குமிழ் ஒளிரவில்லை. | |
| 39. |  | காந்தத்தில் குண்டுசி ஒட்டியுள்ளது. | |




★ கீழ்வரும் வினாக்களுக்கு இப்படத்தைப் பயன்படுத்தி விடை எழுதுக.

40. இப்படம் எந்த நாட்டைக் குறிக்கின்றது. உமது விடைய ஆங்கிலத்தில் எழுதுக?..........
41. இந்த நாட்டுக்கு வடக்குப்புறமாக உள்ள மிகப்பெரிய நாடு?
..........
42. நீர் வினா (41) இல் குறிப்பிட்ட நாட்டையும் இலங்கையையும் பிரிக்கும் நீர்ப்பரப்பின் பெயர் என்ன?
..........
43. A என்ற இடத்தில் இயற்கைத் துறைமுகம் ஒன்று அமைந்துள்ளது. A இடத்தின் பெயரை எழுதுக..........
44. B என்ற இடத்தில் அமைந்துள்ள தொழிற்சாலை எது?
..........
45. இப்படத்தின்மூலம் காட்டப்படும் நாட்டைச் சூழ்ந்து காணப்படும் சமுத்திரம் எது?
..........
46. C என்ற இடத்தின் பெயரை எழுதுக?
..........
47. D என்ற இடமே இலங்கையிலேயே மிக உயரமான இடமாகும். இந்த இடத்தின் பொதுவான பெயர் என்ன? ..........
48. இந்த நாட்டில் வாழ்ந்த ஆதிக் குடிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
..........
49. இந்த நாட்டின் வானொலிச் சேவை எவ்வாறு அழைக்கப்படும்?
..........

இந்த நாடு தனது நாட்டு மக்களை கீழ்வரும் விடயங்களில் தரமானவர்களாகப் பேணுவதற்குச் செய்துள்ள மிகவும் சிறந்த செயல்திட்டத்தை மட்டும் எழுதுக.

50. கல்வி..........
51. மருத்துவம்..........

★ சரியான விடையின் கீழ் கோடிடுக.

52.  இவ்வுரு காட்டுவது
1) கவனமாய் நிற்றல் 2) இலகுவாய் நிற்றல்

53.  இவ்வுரு காட்டுவது
1) கவனமாய் நிற்றல் 2) இலகுவாய் நிற்றல்

54. பின்வருவனவற்றுள் எது நீளத்தை அளப்பதற்கான அலகு அல்ல.
1) மில்லிலீற்றர் 2) மில்லிமீற்றர்
55. ஒரு உணவுப் பொருளை (பால்மாபைக்கற்) வாங்கும்போது நீர் அவதானிக்கவேண்டிய ஓர் அம்சம்
1) உற்பத்தித் திகதி 2) காலாவதித் திகதி

★ கீழே இரு நிரல்களில் தகவல்கள் தரப்பட்டுள்ளன. அதில் முதலாவது நிரலில் சில தொழில் முயற்சிகளும், இரண்டாவது நிரலில் அத்தொழிலின் விளைபொருட்களும் தரப்பட்டுள்ளன. தொழிலுடன் விளைவுப் பொருட்களை இணைக்க. இதற்கு குறித்த தொழிலிற்குரிய விளை பொருட்களின் இலக்கத்தை நடுவே உள்ள கூட்டினுள் எழுதுக.

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| 56. கால்நடை வளர்ப்பு | ☐ | 1. கடல் அட்டை, மீன் எண்ணை |
| 57. மீன்பிடி கைத்தொழில் | ☐ | 2. தும்புத்தடி, விளக்குமாறு |
| 58. தும்புக் கைத்தொழில் | ☐ | 3. யோகட், வெண்ணெய் |
| 59. பின்னுதல், இழைத்தல் | ☐ | 4. பெட்சீட், சாறம் |
| 60. நெசவுத்தொழில் | ☐ | 5. பாய், பெட்டி, கடகம் |

★ உமது சூழலில் காணும் சில அங்கிகளும், அவற்றின் இயல்புகளும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு அங்கிக்கும் பொருந்தும் சரியான இயல்புகளை (✓) என்பதன் மூலம் அடையாளப்படுத்திக் காட்டுக.

| | அங்கி | வாழிடம் | | உணவு | | | இனம் பெருகுதல் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நீர் | தரை | தாவரம் | மாமிசம் | அனைத்தும் | குட்டி | முட்டை |
| 61. | நத்தை | | | | | | | |
| 62 | கரப்பான் | | | | | | | |
| 63. | வௌவால் | | | | | | | |
| 64. | எலி | | | | | | | |
| 65. | தவளை | | | | | | | |

★ கீழே சில ரேகைகள் ; கோடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றால் வரையப்படக்கூடிய படங்களும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு படத்திற்கும் பொருந்தும் சரியான ரேகையின் கீழ் (✓) அடையாளமிட்டுக் காட்டுக.

| | ரேகை | புகை | தரை | நீரலை | பனையோலை | தோடம்பழம் | தண்டவாளம் | முட்டை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 66. | சுருள்ரேகை | | | | | | | |
| 67. | அலைரேகை | | | | | | | |
| 68. | கோணரேகை | | | | | | | |
| 69. | வட்ட ரேகை | | | | | | | |
| 70. | சமாந்தரரேகை | | | | | | | |

★ கீழே சில வாத்தியக் கருவிகள் தரப்பட்டுள்ளன. அவை எந்த வகையைச் சார்ந்தவை என்பதை (✓) என்பதன் மூலம் அடையாளமிட்டுக் காட்டுக.?

| | வாத்தியக்கருவி | நரம்புக் கருவி | வளிநிரல் கருவி | தோற்கருவி |
|---|---|---|---|---|
| 71. | வீணை | | | |
| 72. | மேளம் | | | |
| 73. | புல்லாங்குழல் | | | |
| 74. | வயலின் | | | |
| 75. | உடுக்கு | | | |

★ மரங்களைக் காப்போம் என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலையுடன் கூடிய ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது. 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

76.......... 77..........
78.......... 79..........
80.......... 81..........

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள்—38

மாணவர்முழுப்பெயர்: ..........
பாடசாலையின் பெயர்:..........
வீட்டின் முகவரி:..........

மாணவர்களே! உங்கள் விடைகளை 22.10.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15,வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக் களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# செய்தித் துளிகள்

## பன்னாலைநோக்கி தென்பகுதியினர் படை எடுப்பு

(பன்னாலை)

பன்னாலைப் பகுதியில் திராட்சைச் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதால், திராட்சைப் பழங்களைக் கொள்வனவு செய்யும் தென்பகுதி வியாபாரிகளின் நடமாட்டம் அங்கு அதிகரித்துள்ளது.

தற்போது திராட்சை அறுவடை அப்பகுதியில் நடைபெற்று வருவதால், தென்பகுதி வியாபாரிகள, மகள மற்றும் விடுமுறையில் செல்கின்ற இராணுவத்தினர் ஆகியோர் மேற்படி பகுதியில் திராட்சைப பழங்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இங்கு திராட்சை ஒரு கிலோ 50ரூபா முதல் 70ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றமையும இங்கு கொள்வனவு செய்யப்படும் திராட்சை கொழும்பில் 100ரூபாவாக விற்பனை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது.(உ-32)

## சுயதொழில் ஊக்குவிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறும் 50வயதிற்குட்பட்ட இளம் விதைவைகளுக்கு சுயதொழில் முயற்சிக் கடனாக ஒன்றரை இலட்சம் ரூபாவை வடக்கு-கிழக்கு சமூக சேவைத் திணைக்களம் வழங்கியுள்ளது.

இம் மானிய உதவிகளைப் பெற்றுள்ள 15 இளம் விதைவைக்குடும்பங்களும் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.இராசலிங்கம் தெரிவித்தார்.

(உ-52)

## விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு

(காரைநகர்)

காரைநகர் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழுவின் அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெற்றது.

விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக உளரி விளையாட்டுக்கழக உறுப்பினர் ம.கோபியும் செயலாளராக தோப்புக் காடு விளையாட்டுக்கழக உறுப்பினர் மா.மதியழகனும், பொருளாளராக கோவளம் விளையாட்டுக்கழக உறுப்பினர் த.சூரியகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-246)

## பெண்களுக்கான யோகாசன வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தபட்டு வரும் யோகாசன வகுப்புக்களின் புதிய பிரிவுகள் நேற்று முன்தினம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆரம்பமாகின.

பெண் ஆசிரியரினால் பயிற்றுவிக்கப்படும் இவ் வகுப்பில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள எவரும் பங்கு பற்றிப் பயனடையலாம் என இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். செயலகம் கேட்டுள்ளது.

(உ)

## வெள்ளைப் பிரம்பு தினம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் வெள்ளைப் பிரம்பு தினம் இன்று நடைபெறவுள்ளது.

விழிப்புலனற்றோரின் விடியலுக்கான கொடி விற்பனையும் அன்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்படும் என கழகச்செயலாளர் என்.தங்கராஜா அறிவித்துள்ளார்.

(உ-52)

## கூட்டுறவுச் சங்க பேராளர் சங்கமம்

(மருதங்கேணி)

கூட்டுறவுச் சங்க பேராளர் சங்கம நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் 9மாவட்டங்களைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் இச் சங்க நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-35)

## தவறிவிட்ட பொருட்களைப் பெறலாம்

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேர், தீர்த்த காலங்களில் பக்த அடியார்களால் தவறவிடப்பட்ட பொருட்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

பணப்பைகள்(பேர்ஸ்)-5, கைக்கடிகாரம்(ஆண்)-1, கைக்கடிகாரம் (பெண்)-1, கால்சங்கிலி 1, அடையாள அட்டை 1ஆகியனவே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தவறவிட்டவர்கள் தகுந்த அடையாளம் காட்டி மேற்படி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-52)

## கொடிவாரம்

(சுதுமலை)

யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் விசேட படையணிகளும் இணைந்து நடாத்தும் கொடிவாரம் இன்று 15ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 30அம் திகதிவரை யாழ். மாவட்டத்தின சகல பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் அனுட்டிக்கப்படவுள்ளது.

விபத்துக்களைத் தடுத்தல், முதலுதவி, சமூக நலன்புரித் திட்டங்கள், இலவச தையல் பயிற்சி, அங்கவீனர்களுக்கு உதவுதல் போன்ற செயற்றிட்டங்கள் இந்த கொடிவாரத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

(பி-252)

## விபரம் திரட்டல்

(வடலியடைப்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் விபரங்களைத் திரட்டும் பணியில் வடகிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக, வட-கிழக்கிலுள்ள அனைத்துக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை வட-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக களத்தின் பதில் பணிப்பாளர் இ.இளங்கோவன் அனுப்பி வைத்துள்ளார். (உ-21)

## தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து

(கந்தர்மடம்)

தீவுப்பகுதிகளில் கால்நடைகளுக்கான தொண்டையடைப்பான் நோய்க்கு தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்வு கடந்த இருவார காலமாக இடம்பெற்றது.


நெடுந்தீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏட்பாட்டில், தீவக கால்நடை வைத்தியசாலை உத்தியோகத்தர்களான ஆர்.கணேசராசா மற்றும் பி.பேரின்பசிவம் ஆகியோர் மேற்படி தடுப்பு மருந்துகளை வழங்கினர்.

கடந்த 26அம் திகதி முதல் 2ஆம் திகதிவரை வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளிலும், 6ஆம் திகதி மதல் 9ஆம் திகதி வரை நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவிலும் இத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் 800 எண்ணிக்கையான கால்நடைகளுக்கு இத் தடுப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-112)

# இரட்டைச் சதமடித்த ட்ராவிட் ஆட்ட நாயகனாகத் தெரிவு

இந்திய அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையில் குஜராத்தில் உள்ள அஹமதாபாத் விளையாட்டரங்கில் நடைபெற்று



முடிந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளது.

போட்டியின் 5வது நாளில் வெற்றி பெறுவதற்காக 370 ஓட்டங்களைப் பெறவேண்டிய நியூசிலாந்து அணி, ஆட்ட நேர முடிவின் போது 6விக்கெற் இழப்பிற்கு 272 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

நியூசிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் கிரேக் மக்மிலன் மிகவும் பொறுப்புணர்வுடனும், நிதானததுடனும் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 83 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன், நியூசிலாந்து அணியினை தோல்வியில் இருந்து மீட்கும் பொருட்டு சிறப்பாக துடுப்பெடுத்தாடியிருந்தார்.

இவருக்கு பக்க பலமாக நியூசிலாந்து அணிக்காக முதல் இன்னிங்சில் சதம் ஒன்றைக் குவித்திருந்த நெதன் அஸ்ரல் ஆட்டமிழக்காமல் 51ஓட்டங்களைப் பெற்றிருந்தார.

இதேவேளை, நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான லூவின்சனும் 67ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

இந்திய வீரர்களின் இரண்டாம் இன்னிங்ஸ் பந்துவீச்சில் அனில் கும்ளே 95ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4விக்கெற்றைக் கைப்பற்றியிருந்ததுடன், ஹர்பஜன்சிங் 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தார்.

இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 5விக்கெற்றுக்களை இழந்து 500ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. நியூசிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இந்திய அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 6விக்கெற் இழப்பிற்கு 209 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் மீண்டும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டு நியூசிலாந்து அணிக்கு துடுப்பெடுத்தாடச் சந்தர்ப்பம வழங்கியது. நியூசிலாந்து அணி 5ஆம் நாள் ஆட்ட நேரமுடிவின போது அதன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக 6விக்கெற் இழப்பிற்கு 272 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதேவேளை, இந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆட்ட நாயகனாக முதல் இன்னிங்ஸில் இரட்டைச் சதம் ஒன்றையும், இரண்டாவது இன்னிங்ஸில் அரைச்சதம் ஒன்றையும் பூர்த்தி செய்திருந்த இந்திய அணியின் ராகுல் ட்ராவிட் தெரிவு செய்யப்பட்டார். இந்த ஆட்ட நாயகன் விருதிற்காக இவருக்கு இந்திய மதிப்பில் 35ஆயிரம் ரூபா பணப் பரிசும் விடிஜோக்ஹான் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த வெற்றி கேடயமும் வழங்கப்பட்டது.

இப்போட்டித் தொடருக்கான போட்டித் தீர்ப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெற் வீரர் றஞ்சன் மடுகல கடமையாற்றி இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட்போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி மொகாலியில் நடைபெறவுள்ளது. (உ-68)

# இலங்கை கால்பந்து அணி சிரியா புறப்பட்டது

ஆசிய கால்பந்தாட்ட கூட்டுச் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற ஆசிய கால்பந்தாட்டப் போட்டிக்கான தகுகாண் போட்டிகளின் இரண்டாவது சுற்றில் விளையாடுவதற்காக இலங்கை கால்பந்தாட்ட அணி கடந்த திங்கட்கிழமை சிரியா புறப்பட்டுச் சென்றுள்ளது.

ஸ்ரீன்வோல் தலைமையிலான 22வீரர்கள் அடங்கிய குழுவினரே சிரியா பயணமாயுள்ளார்கள்.

இந்த இரண்டாவது சுற்றுபபோட்டிகளில் சிரியா, தேர்க்மெனிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய மூன்று நாடுகளை இலங்கை கால்பந்தாட்ட அணி எதிர்கொள்ளவுள்ளது. இதில் ஒவ்வொரு அணியுடனும் தலா 2போட்டிகள் வீதம் மொத்தமாக 6போட்டிகளில் இலங்கை அணி விளையாடவுள்ளது.

இரணடாவது சுற்றுப் போட்டிகளில சிரியாவிற்கு எதிரான போட்டிகள் இன்றும், எதிர்வரும் 18ஆம் திகதியும் டமஸ்கஸ்சில் உள்ள விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

தேர்க் மெனிஸ்தானுக்கு எதிரான போட்டிகள் நவம்பர் மாதம் 9,12 ஆம் திகதிகளிலும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டிகள் நவம்பர் மாதம் 18ஆம் 12,22 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளன.

ஆசிய கால்பந்தாட்டப் போட்டிகளுக்கான தகுதிக்காண் போட்டிகளின் முதல் சுற்றுப்போட்டிகள் கொழும்பில் நடைபெற்ற போது கிழக்குத் தீமோர் அணியை 3:2என்றகோல கணக்கிலும், சைனீஸ தைபே அணியை 2:1என்ற கோல் கணக்கிலும் வெற்றி கொண்டதன் மூலம் இலங்கை கால்பந்தாட்ட அணி ஆசிய கால்பந் தாட்ட போட்டியில் தகுதிகாண் போட்டிகளின் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)




# உலகத் தரப்படுத்தலில் முதலாம் இடத்திற்கு முன்னேறினார், டெனிஸ் வீரர் யுவான் ஹார்லஸ்

உலக டெனிஸ் வீரர்களுக்கான தரப்படுத்தல் வரிசையில் ஸ்பெயின் நாட்டு வீரரான யுவான் ஹாாலஸ் பெரேரா முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். உலக டெனிஸ் வீரர்களுக்கான புதிய தரப்படுத்தல் பட்டியலில் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட போதே இவர் முதலிடத்திற்கு முன்னேறி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரப்படுத்தலில் 4ஆயிரத்து 195 புள்ளிகளைப் பெற்று யுவான் ஹார்லஸ் பெரேரா முதலிடத்திற்கு வந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 4ஆயிரத்து 165 புள்ளிகளைப் பெற்றுள்ள அமெரிக்க வீரரான அன்ரிரொடிக் முதலாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

மேலும் சுவிஸ்சர்லாந்து நாட்டவரான றோஜர் பெடரர் நான் காவது இடத்திலிருந்து மூன்றாம் இடத்திற்கு முன்னேறி உள்ளதுடன் இதுவரை இரண்டாம் இடத்திலிருநத அமெரிக்க வீரரான ஆந்திரேஅகாஷி நான்காம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

இதறகு முன்னர் வெளியிடப்பட்ட உலக டெனிஸ் தரப்படுத்தலில் முதல் இரண்டு இடங்களையும் அமெரிக்க வீரர்கள் தம்வசம் வைத்திருந்த போதும் தற்போதைய பட்டியலின்படி ஸ்பெயின் மற்றும் சுவிஸ சர்லாந்து வீரர்களின் கையோங்கியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# ஆஸி.அணியின் ஸ்திரம் மேலும் ஒருபடி உயர்ந்தது

மேற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெற்சங்க மைதானத்தில் சிம்பாவே அணியுடன் நடைபெற்று முடிந்த முலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ திரேலிய அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 175 ஓட்டங்கள் வித்தியாசததில் அமோக வெற்றி பெற்றுள்ளது.

ஐந்தாவது நாள் ஆட்டம் ஆரம்பிக்கும் போது ஒரு விக்கெற்றை மட்டுமே கைவசம் வைத்திருந்த சிம்பாவே அணி, இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 224 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் துடுப்பாட்டத்தைத் தொடாந்தது. எனினும் அவுஸ்திரேலிய வீரர்களின் பந்து வீச்சிற்கு முகாம் கொடுக்க முடியாமல் ஐந்தாவது நாள் ஆட்ட நேரத்தில் 22.2 ஓவர் வீசப்பட்டிருந்த போது தனதுகடைசி விக்கெற்றையும் 321 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் இழந்தது.

இதன் மூலம் டெஸ்ட் வரலாற்றில் சிம்பாவே அணியுடனான முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி அமோக வெற்றிபெற்று கிரிக்கெற் உலகில் தனது இஸ்திர நிலையை மேலும் உறுதி செய்துள்ளதாக கிரிக்கெற் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 6விக்கெற் இழப்பிற்கு 735 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது. சிம்பாவே அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 239ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸிலும் சகல விக்கெற்றுக் களையும இழந்து 321 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது.

இந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய வீரரான மத்தியூஹேடன் 380ஓட்டங்களைப் பெற்று டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியிருந்தார். இதற்காக இவருக்கு இப் போட்டியின் ஆட்ட நாயகன் விருதும், புதிய டெஸ்ட் உலக சாதனைக்கான சிறப்புப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(உ-68)

## இன்று ஒரு தகவல்

# ஏறுபோல் நட !

ஏறுபோல் நடஎன்கின்றார் மகாகவி பாரதியார். ஒரு கிராமம் அங்கு இரண்டு பக்கங்களிலும் வயல் வெளிகள் பசுமைக்கோலம். அந்தக் கிராமப் பாதையில் நடந்து வருகின்றது, நிமிர்ந்து வருகின்றது ஒரு காளை. அந்தக்காளைக்குத் தான் எத்தனை கம்பீரம்! அந்தப் பார்வையில் எத்தனை மிடுக்கு பளிச்சிடுகிறது. அதன் தோற்றத்தில் என்ன கம்பீரம்! கம்பீரம் கால் முளைத்து வருவதைப் போல் அந்தக்காளை வருகின்றது. அப்படிப் பட்ட ஏறுபோல் நாமும் நடக்க வேண்டும் என்கின்றார் பாரதியார்.

சங்க இலக்கியம் இந்த ஏற்றைப் பற்றிக் கூறும் போது ''பெருமிதப்பகடு'' என்று சொல்கின்றது. பெருமிதம் அதற்கு இயல்பாகவே இருக்கின்றது. அது இறக்குமதி செய்யப்பட்டதல்லவே. அது இயல்பாகவே உடன் பிறந்தது. ஆகவேதான் ஏறுபோன்ற நடை இளைஞர்களுக்கு இருக்க வேண்டும் என்று கவிதை பாடிய பாரதி ''ஏறு போல் நடையினாய் வா...'' என்று வாழ்த்தி வரவேற்றார். ஏறு போன்ற நடையினாய் என்று இளைஞர்களை அவர் சித்தரித்துக் காட்டுகின்றார்.

கம்பன் கூறுவான் நடையின் நின்று உயர்நாயகன்... நடை என்பது மிகவும் முக்கியம். நடையின் நின்று உயர் நாயகன். நன் நடை என்பது இளைஞர்களுக்குத் தேவை. நடை என்பதை நடத்தை என்றும் சொல்கினறோம். வெறும் நடை அல்ல நடத்தை என்கின்ற பொருளிலும் நாம் கொள்கின்றோம். ஈந்து புறந்தருதல் என் தலைக்கடனே சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே. வேல் வடித்துக்கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே...வென்று வருவது தான் காளைக்குக் கடன் என்று கூறுகின்றபோது அந்தச் சங்கப் பாடலில் இன்னுமோர் முக்கியமான வரிவரும். நன்னடை நல்கல் வேந்தர்க்குக்கடன். இளைஞர்களுக்கு நல்ல நடையைக் கற்பிக்க வேண்டியது வேந்தர்க்கு கடமை என்று சங்க இலக்கியம் நமக்கு அறிவுறுத்துகின்றது.

ஏறு போல் நடக்கவேண்டும். எப்போது ஏறு போல் நடக்கஇயலும்? மாவீரம் உள்ளத்தில் இருந்தால் அப்படி நடக்க இயலும். சுபாஸ் சந்திரபோஸ், விவேகானந்த மாமுனிவர் இவர்களுடைய உள்ளத்திலிருந்த மாவீர உணர்வு இருக்கின்றதே அது ஏறுபோல் கம்பீரமான காட்சியை அவர்களுக்கு வழங்கியது.

ஆகவே நம்முடைய உள்ளத்திலே இருக்கக்கூடிய பெரு நிலையான எண்ணம் தான் நம்முடைய கண்கள் வழியே கசிகின்றது. நமது நடையாகப் பொழிகின்றது. நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் எவர்க்கும் அஞ்சாத நெஞ்சமும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் வேண்டும் பெண்களுக்கு என்று பாரதி பாடினான்.

நிமிர்ந்த நடை எப்படி வரும் என்று கேட்டால் உள்ளத்தில் சத்தியம் இருந்தால், உள்ளத்தில் உண்மையிருந்தால் நிமிர்ந்த நடை வரும். கோழைகளுக்கு நிமிர்ந்த நடை சாத்தியமில்லை. பலவீனமானவர்களுக்கு நிமிர்ந்த நடை சாத்தியமில்லை. உள்ளத்திலே உறுதி வேண்டும். உள்ளத்தில் உண்மை வேண்டும். அப்படி உண்மை உள்ளத்தில் கோலோச்சுகின்றபோது கால் தானாகவே ஏறுபோல் நடைபோடும். அப்படிப்பட்ட கட்டளையைத் தான் மகாகவி பாரதி நமக்கு வழங்கினார். ஏறு போல் நடை என்பது பாரதி நமக்கு இட்ட கட் டளை. ஆகவே நாம் ஏறுபோல் நடப்போம் உண்மை வழியிலே.

இளந்தேவன்

# போக்குவரத்து விழிப்புணர்வு வாரம் அனுட்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் நவம்பர் 1ஆம் திகதி முதல் 7ஆம்திகதி வரை போக்குவரத்து விழிப்புணர்வு வாரம் அனுட்டிக்கப் படவுள்ளது.

இது விடயம் தொடர்பாக கடந்த ஞாயிறன்று வடபிராந்திய இணைப்புக்குழுவின் தலைவரான ஆர். வசந்தசேனன் தலைமையில் ஓர் முக்கிய கலந்துரையாடல் திருநெல்வேலி நிலையத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வடபிராந்திய சாயி நிலைய ஆலோசகர் செ. சிவஞானம், சாயி இளைஞர் சேவைகள் இணைப்பாளர் டாக்டர் இ. கணேசமூர்த்தி உட்பட வேறும் பலர் பங்கு கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாளுக்குநாள் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களுக்கான அடிப்படைக் காரணம் லைசென்ஸ் இன்றி வாகனங்கள் செலுத்தப்படுவதாகும். அத்துடன் ,சிறுவயதிலேயே தமது பிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொடுக்கின்றனர். போக்குவரத்து விதிமுறைகள் எதுவும் தெரியாமல் அவர்கள் தமது இஷ்டப் பிரகாரம் மிகுந்த வேகமாக மோட்டார் கைக்கிளைச் செலுத்துகின்றனர்.

எனவே, இது தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நிலையத்தின் சார்பாக துண்டுப் பிரசுரங்கள் பலவும் வெளியிடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-16)

# ஆளும் கட்சிக்கு கொடுக்கின்ற ஆதரவை விலக்க வேண்டும்

## ம. ம. மு. மத்திய சபை கோரிக்கை

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பி.சந்திரசேகரனிடம் மலைய மக்கள் முன்னணியின் மத்திய சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மத்திய அமைச்சரவையில் தமக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை எனபதையும்,மத்திய மாகாண சபையில் மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் அவமதிக்கப் பட்டுள்ளார்கள் என்ற காரணங்களைக காட்டியே மேற்படி கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்திய மாகாண சபையில், மலையக மக்கள் முன்னணி ஆளும் கட்சிக்கு கொடுக்கின்ற ஆதரவை வாபஸ் பெற்றால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் தங்களுடைய பலத்தை வெளிக்காட்ட இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தவேண்டும் எனவும் மலையக மக்கள் முன்னணியின் நிறைவேற்றுக் குழு தெரிவித்துள்ளதாக முன்னணியின் செயலாளர் நாயகம் மு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் இந்த முடிவு அரசியல் ரீதியாக அத்தியாவசியமானது என அவர் தெரிவித்துள்ளதோடு, கட்சியின் கௌரவத்தை பாதுகாக்கின்ற பொறுப்பு தலைவர் சந்திரசேகரனுக்கு இருப்பதாகவும் மேலும் சுட்டிக்காடடியுள்ளார்.

(உ)

## இடைக்கால நிர்வாக சபையில்

# முஸ்லிம்களின் பங்கு, பணி என்ன ? அயர்லாந்தில் ஆலோசனைக் கூட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களின் பங்கு தொடர்பாக அயர்லாந்தில் முக்கிய ஆலோசனைக்கூட்டம் ஒன்றை தாம் நடத்தவிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஓலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற அம்பாறை மாவட்ட முஸ்லிம் அதிகாரிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும உரையாற்றுகையில்,

அரசினால் வழங்கப்பட விருக்கும வடக்கு-கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஆராயும் இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமா அதிபர் சி.கே அஸிஸ் மற்றும தாய்லாந்து பல்கலைக் கழகத்தின் அரச அறிவியல் துறைப்பேராசிரியர் கலாநிதி நப்துல்லா ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இடைக்கால நிர்வாக சபை தொடர்பான முக்கிய சந்திப்புக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் அயர்லாந்தில் வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளமையினையடுத்தே, முஸ்லிம்காங்கிரஸ்கட்சியும் இத்தகைய ஆலோசனைக்கூட்டம் ஒன்றை சர்வதேச அளவில் நடாத்தத் தீர்மானித்திருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(உ-63,10)

## இராசி பலன்

15. 10. 2003

(புரட்டாதி 28,புதன்)

பஞ்சமி - மு.இ. 10.37வரை
ரோகிணி - பி.ப. 2. 05 வரை
இராகுகாலம் - 12.02- 1.32
சுபநேரம் - 4.32 - 6.02

**மேடம்**
உணர்ச்சி வசப்படல், போசன சுகம், அதிகாரம், முயற்சி தாமதம்.

**இடபம்**
வெகுமானம், பெரியோரால் மதிக் கப்படுதல், சயனசுகம்,காரிய நன்மை.

**மிதுனம்**
சோம்பல் நிலை, கீழ்ப்படிவு, பிரயாணக்கஷ்டம், முயற்சி தாமதம்.

**கடகம்**
சயன சுகம், நண்பர்கள் சந்திப்பு, தனதானியச்சேர்க்கை, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
நன்கொடை, எடுத்தகாரியம், கைகூடும், போசன நன்மை, அதிகாரம்.

**கன்னி**
எதிர்பாராத செலவு, உத்தியோக பங்கம். சத்துருபீடை, நிர்ப்பந்திக்கப் படல்.

**துலாம்**
முழங்கால்வலி, பொருள் விரயம், மனக்கவலை, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
தேகசௌக்கியம் ,தொழில் நன்மை, களஸ்திர நலம்,காரிய சித்தி.

**தனுசு**
விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, பகைவரால் நன்மை, பிரயாணம், கற்பனை மிகுதி.

**மகரம்**
காரியநாசம், அஜீரண ரோகம், தாழ்ந்த சுபாவம், அபகீர்த்தி.

**கும்பம்**
தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், கல்வியில் ஆர்வம், தொழில் மந்தம்.

**மீனம்**
நற்கீர்த்தி, மாதர்நட்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், பொருள்சேர்க்கை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## விவசாய உத்தியோகத்தர்

# நேர்முகப் பரீட்சைக்கு 15 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விவசாய கால்நடை அமைச்சரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15பேரின் பெயர் விபரங்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

க.சிவபாலினி- 5, சி.பி.றூபன் பீரிஸ் மாவத்தை, ப.சுசிகரன்- சோலையா வளவு தெல்லிப்பழை, க.நிறைஞ்சினி- நீலிப்பந்தனை காரைநகர், பா. பாலதீபன்- நெருஞ்சியோலை பன்னாலை, கி.சிவராஜா- 19, கொண்டலடிலேன் நல்லூர், கு.மயூரன்-55/31, அத்தபத்து தெரேசா, ச.கிருஷாந்தி- 171,அரசடி றோட் கந்தர் மடம், ஜெ. தேவகர்- மானிப்பாய் வடக்கு, சி.ஜெலன்-297, ஆஸ்பத்திரி வீதி சாவற்காடு, நா. பிரபாகரன்- 473/3, கே.கே.எஸ். வீதி வண்ணார் பண்ணை, த. ரதிவதனி- ஏழாலை கிழக்கு, கா.யோகசக்தி- குப்பிளான் தெற்கு, ம. நிரஞ்சனா- மருதக்கோட்டம் ஆஸ்பத்திரிலேன் மானிப்பாய், நா. சகிலா- 42/5, அம்மன் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம். ஜெ.நடராசா- அராலி தெற்கு வட்டுக்கோட்டை.

ஆகியவர்களின் பெயர் விபரங்களே இவ்விதம் அனுப்பிவைக்கப பட்டுள்ளதாகவும் உரியவர்கள் தங்களுடைய படிவங்களை இந்து கலாசார அமைச்சின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு, மருதானையில் நடைபெறவுள்ளது. (உ)

# ஜீவனோபாய ஆதாரத் திட்டம்

(சங்கானை)

ஜீவனோபாய ஆதார செயற்பாட்டுத்திட்டத்தின் கீழ் நவாலியில் உள்ள பல குடும்பங்கள் பயன்பெறவுள்ளன. மேற்படி பகுதியில் உள்ள வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 29 குடும்பங்களுக்கே இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-34)

## வடமராட்சி கிழக்கில்

# மலேரியா, டெங்கு எதிர்ப்பு நடவடிக்கைகள் துரிதம்

(சுதுமலை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள வடமராட்சி கிழக்கு,செம்பியன்பற்று மற்றும் நாகர்கோயில்,குடத்தனைப் பகுதிகளில் மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் நோய்களிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் மலேரியா தடுப்பு இயக்கப் பகுதியினரும் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர்.

தற்போது இடையிடையே பெய்து வரும் மழைகாரணமாக நுளம்புகள் பெருக்கமடைந்து தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாகவும், எனவே பொது மக்கள் மழை நீர் தேங்கும் சிறிய பாத்திரங்கள் மற்றும் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்திக்கொள்ளவேண்டும் எனவும் அவர்கள் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

அத்துடன், கடந்த வருட இறுதி 4மாதங்களில் யாழ். மாவட்டத்திலே மிகக் கூடுதலான அளவு மக்கள் இப்பகுதிகளிலேயே தெற்று நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

(பி-252)

கனவிலும் இன்னது மன்னோ
வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு
–குறள்–

வலம்புரி

## கட்சியை ஞாபகப்படுத்தும் சிஹல உறுமய

விடுதலைப்புலிகளின் முகாம் அமைந்துள்ள குரங்குபாஞ்சானுக்குப் பேரணியாகச் செல்ல சிஹல உறுமய எடுத்த முயற்சி தோல்வி கண்டது. சிங்களப் பகுதியில் தமிழர்களுக்கு எதிராக இனவாதம் கக்கிவரும் சிஹல உறுமய தன்னை வளர்த்துக் கொள்வதில் படாப்பாடு படுகிறது. பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை வைத்திருந்த சிஹல உறுமய அடுத்த தேர்தலில் அதனையும் பறிகொடுத்தது.

இனவாதம் பேசியதற்காக சிஹல உறுமய உள்ளதையும் இழந்த நிகழ்வு, அக்கட்சியை சிங்கள மக்கள் எள்ளளவேனும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்தியது. இத்தகையதோர் நிலையில், புலிகளின் முகாம் அமைந்துள்ள குரங்குபாஞ்சான் முகாமிற்கு பேரணியாகச் செல்ல சிஹல உறுமய புறப்பட்டதெனின், அதற்குக் காரணம் குரங்குபாஞ்சானுக்குச் செல்ல இராணுவம் அனுமதிக்கப் போவதில்லை என்பதாகும்.

குரங்குபாஞ்சான் முகாமிற்குப் போவதற்கு இராணுவம் அனுமதிக்காதென்ற அசையாத நம்பிக்கையிலேயே சிஹல உறுமய துணிவோடு பேரணியை ஆரம்பித்தது. சிலவேளை இராணுவம் தடுக்காமல் சிஹல உறுமயவின் பேரணிக்கு அனுமதி வழங்கியிருந்தால் கூட சிஹல உறுமய அந்த இடத்தில் இருந்து திரும்பியிருக்கும். இதுவே யதார்த்தம்.

எனினும், இதனை நடைமுறையில் பரீட்சித்துப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள சிஹல உறுமய பேரணியாகப் புறப்பட்டு தனது கட்சியின் பெயரை தென்னிலங்கை மக்களுக்கு ஞாபகப்படுத்த முற்படுகிறது.

உண்மையிலேயே இந்த நாட்டின் மீது, பௌத்த மதத்தின் மீது சிஹல உறுமயவுக்குப் பற்றும், பாசமும் இருக்குமாயின், அவர்கள் முதலில் செய்யவேண்டியது இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் போது அதில் இணைந்து கொள்வதாகும்.

இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதில் அரசு பெரும் தோல்வி கண்டு வருகிறது. இராணுவத்தில் சேர்ந்து நாட்டிற்காகப் போராடத் துணிவற்ற சிஹல உறுமய குரங்குபாஞ்சான் முகாமுக்குப் பேரணியாகச் செல்லமுற்பட்ட போதிலும், இராணுவத்தில் சேர்ந்து போராடும் துணிவு அதற்கு இல்லை எனல், சிஹல உறுமய சற்று அமைதியைக் காப்பதே நல்லதாகும்.

இனவாதம் என்றபெயரால் நாட்டில் இரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்த போது உரு எடுத்து ஆடிய சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் இனிமேலாவது நாட்டில் அமைதி, சமாதானம் என்பவற்றை விரும்பி அதற்கேற்றவாறு தம்மை வழிப்படுத்த முன்வர வேண்டும்.

# வழித்துணைக்கொரு வெள்ளைப்பிரம்பு

## இன்று வெள்ளைப்பிரம்பு தினம்

இன்றைய உலகு எவ்வளவோ முன்னேறிவிட்டது. தொழில்நுட்பத்தின் வளர்ச்சிகள் இன்று ஒவ்வொரு கிராமத்துக்குள்ளும் வசதிகள் பேசுகின்றன. மனிதன் ஒவ்வொரு கணமும் வேகமாக சிந்திக்கும் இந்த நாட்களில், விழிக்கு வழித்துணை செய்யும் வெள்ளைப் பிரம்பு தினத்தினைப் பற்றியும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தினையும் இந்த ஒக்ரோபர் 15ல் சிந்திக்க வேண்டியவனாக இருக்கின்றான். தான், தனது குடும்பம், தனது சுற்றம என உறவுகொள்ளும் இந்த மனித இனம் எம்மைப் போல பிறருக்கும் உணர்வுகள், தாகங்கள் என்பன உள்ளன என்பதை ஒருகணம் எண்ணிப் பார்க்க வேண்டியவனாகின்றான். விழிப்புலனற்றவர்களின் வாழ்க்கையில் கதை பேசும் அந்த வெள்ளைப் பிரம்பானது, சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றதொன்றாக விளங்கி இருப்பினும் கூட, அதன் முக்கியத்துவத்தினைப்பற்றி எம்மில் பலர் அறிந்திருக்கவில்லை. இது மிகவும் மனவேதனை கொள்ளத் தக்கதாகும்.

### வெள்ளைப் பிரம்பு என்பது

விழியிழந்தவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் இவ் வெள்ளைப் பிரம்பு, இன்றைய காலகட்டத்தில் முக்கியம் பெற்றதொன்றாக விளங்குகின்றது. பொதுவாக சாதாரண மனிதர்கள் போன்று நடக்க, இருக்க, உறவாட, தொழில் செய்ய... உற்ற நண்பன் போன்று உதவி செய்யும் பிரம்பாக இது விளங்குகின்றது.

வெள்ளைப் பிரம்பு என்றால், வெள்ளை நிறத்தாலான நான்கு துண்டுகளாக மடிக்கககூடிய ஒரு தடி மட்டுமல்ல, இது விழிப்புலனற்றோருக்கு வழங்கப்படுகின்ற ஓர் அடையாளச சின்னமாகவும் விளங்குகின்றது. எமது நாட்டில் பாவிக்கப் படுகின்ற வெள்ளைப் பிரம்புகளை ஒத்த பிரம்பையே அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் பயன்படுத்தி வருகின்றன. இத்தகைய பெருமைக்குரிய இவ் வெள்ளைப் பிரம்பானது, 1930ஆம் ஆண்டு அமெரிக்க இலினோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்னும் இடத்தில் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, லயன்ஸ் கழகத்தினரால் கொண்டாடப்பட்டது. இன்று அவை தொடர்ச்சியாகக் குறித்த தினத்தில் மட்டும் நினைவு கூரப்படுகின்றது.

### உபயோகமுறை

வெள்ளைப் பிரம்பானது பார்வையற்ற ஒருவர் பிறர் உதவியின்றி எவ்வாறு நடக்க உதவுகின்றது என்பது பலருக்கு புரியாத புதிராகவே உள்ளது. மேலோட்டமாக பார்கும் போது, ஒருவர் வெள்ளைப் பிரம்பினை வலது இடது பக்கமாகத் தட்டிச் செல்வது எமக்குத் தெரியாது. வலது பக்கம் தட்டிச் செல்லும்போது இடது கால்களும், இடதுபக்கம் தட்டுகையில் வலதுகால்களும் முன்னோக்கி நகர்வதை நாம் அவதானிக்கின்றோம். இதன் மூலம் பாதையில் தென்படும் மேடு, பள்ளங்களை அறிந்து அவதானமாக முன்னோக்கிச் செல்ல முடிகின்றது. பொதுமக்களாகிய நாங்கள் நீண்ட தூரங்களைக் கண்டு ரசிக்கின்றோம். ஆனால் விழிப்புலனற்ற நபரானவர் நடக்கும்போது உணருகின்ற ஒவ்வொரு அடிகளை மட்டுமே ரசிக்க வேண்டியிருக்கின்றது.

பார்வையற்றவர்களுக்கு, பார்வை உள்ளவர்களிடமிருந்து உதவியினைக் கோருகின்ற இவ் வெள்ளைப் பிரம்பினை நாம் ஒவ்வொருவரும் உண்மையான ஈடுபாட்டுடன் அறிவதன் மூலமும், அவர்களுடைய உணர்வுகளை ஒரு கணம் சிந்திப்பதன் மூலமும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். பெறுதற்கரிய மானிடப் பிறப்பினைப் பெற்றது மட்டுமல்ல, கூன், குருடு நீங்கிப் பிறத்தலாலும் நாம் பேறு பெற்றுள்ளோம். இத்தகைய செலவத்தைக் கொண்டு இன்னொரு உறவுக்கு விழிகொடுப்போமாக.□

**வ. சசிகுமார்**

# இலங்கைச் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறது தமிழக அரசு

## பா.ம.க.நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கடும் அதிருப்தி

(லண்டன்)

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதில் பிரதமர். ரணில் விக்கிரமசிங்க மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றார். இவரின் இச் செயறபாடு எனக்கு மிகவும் திருப்தியைத் தருகிறது.

இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் பி.பி.சி.தமிழ் சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக இடம்பெறறு வந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகுந்த அக்கறையுடன் செயறபடுகின்றார் என்பதை நாம் மட்டுமல்ல சர்வதேச நாடுகளே மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

இந்நிலையில் அவரது இந்தச் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் தமிழக அரசு செயற்பட்டுவருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் பயஙகரவாத செயல்களை கைவிட்டு, சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலும் தமிழக அரசு அவர்களைப் பயங்கர வாதிகளாக விமர்சித்து வருகின்றது.

அத்துடன் அவர்களுக்கு ஆதரவாக பேசும் தமிழர்களையும் அரசியல் வாதிகளையும் சிறையில் தள்ளி வருகிறது. இது இலங்கைச் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றது.

அத்துடன், இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அவரின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் வகையில் சர்வதேச நாடுகளில் பொயப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவும் பிரதமர் ரணில் விககிரமசிங்க மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாக அமைகின்றது.

இதேசமயம், பிரதமர் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெறவேண்டும் என்பதில் இந்திய அரசு மிகுந்த அக்கறையாக இருக்கிறது என்றார். (உ-62-10)

# அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 24ஆம் திகதி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள



மக்களை ஒன்றுதிரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகந்த ராஜபக்ஷ தெரிவித்துளளார்.

கேகாலையில நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித்தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஐக்கியதேசிய முனணி அரசுக்கு எதிரான மக்கள் சக்தியை காட்டுவதே இவ் ஆர்ப்பாட்டத்தின் நோக்கம்.

இதன்மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கி, ஜனாதிபதிக்கு மக்கள் ஆதரவு கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளதுடன்,

ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட சமுர்த்தித் திட்டங்களை தற்போதைய அரசு நிராகரித்து வருகிறது.

பொலிஸ், இராணுவம் உட்பட அரசாங்க ஊழியர்கள் அனைவரும் சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்று இருப்பதுவும், பல்கலைக்கழகங்கள் வன்முறைக் கூடங்களாக மாறுவதும் கவலைக்குரிய விடயங்களாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-61)

தினசரி தியானம்

ஆன்மாவை உணருங்கள்

உண்மையான ஆன்மா நமது ஆசைகளாகிய மேகங்களுக்குப்பின் மறைந்திருக்கின்றது. ஆன்மாவின் இருண்ட பகுதி ஐம்புலன்களின் உதவியுடன் வேலை செய்வதால் உண்மையான ஆன்மாவின் விருப்பம் வெளியே மறைக்கப்பட்டிருக்கின்றது. இருண்டிருக்கின்ற ஆன்மாவை வென்று இறைவனது பேரருளை அனுபவிப்பதற்காக இந்தச் சிக்கலான முடிச்சை அவிழ்க்கும் தைரியத்தைக் கொள்ளுங்கள்.

சுவாமி சிவானந்தர்

# போலியோ சொட்டுமருந்து 2ஆம் சுற்று 18ஆம் திகதி

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் எதிர்வரும் 18ஆம திகதி சனிக்கிழமை 2ஆம் சுற்று போலியோ தடுப்பு மருந்து சகல 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே முதலாம் சுற்று சொட்டு மருந்து கடந்தமாதம் 20ஆம் திகதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சகல 10 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கும் முதல் மருந்து பெற்ற அதே மருந்து வழங்கும் நிலையத்திற்கு திரும்பவும் சென்று தடுபபு மருந்தை தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும் என சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (உ-252)

## சுற்றிவளைப்பில் 70 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக் காலை வரை நடத்தப்பட்ட 24 மணிநேர சுற்றிவளைப்பில் சந்தேகத்தின் பேரில் 70 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இத் தேடுதல் நடவடிக்கையில் 139 வீதித் தடைகளும், 61 ரோந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

(தி-61)

# க.பொ.த. சாதாரணதர பரீட்சை டிசம்பர் 1ந் திகதி ஆரம்பம்

## 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 7ந் திகதி நடைபெறும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாந்திகதி ஆரம்பமாகி, 12ந் திகதி வரை தொடர்ந்து நடைபெறுமென்றும்,ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை அதே மாதம் 7ந் திகதி நடைபெறுமென்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கல்விப் பொதுததராதர சாதாரண தரப் பரீட்சையில் 3 இலட்சத்து 80 ஆயிரம் பாடசாலைப் பரீட்சார்த்திகளும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 3 இலட்சத்து 10 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (இ)

# அமைச்சர் ஜஸ்வந்சிங்கா நேற்று இலங்கை வந்தார்

(கொழும்பு)

இலங்கை இந்தியக் கூட்டு ஆணைக்குழுவின் ஐந்தாவது மாநாட்டில கலந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கா தலைமையிலான குழுவினர் நேற்று இலங்கை வந்து சேர்ந்தனர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருதரப்பு உறவுகளை விஸ்தரிப்பதற்கு இவ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

நாளை ஆரம்பமாகும் ஐந்தாவது மாநாட்டில் வர்த்தகம், நிதி, முதலடுகள், சமூக, கலாசார, கல்வி, மற்றும் விஞ்ஞானத் தொழில் நுட்பங்களை ஊக்குவிப்பது பற்றி கலந்துரையாடப்படும். இதில் இலங்கையின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணன்டோ ஜஸ்வநசிங்காவுடன் இணைந்து மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.

இதேவேளை இன்று மாலை ஜஸ்வந்சிங்கா தேசிய கலாபவனத்தில் நடைபெறவுள்ள பௌத்தமத வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (இ-6)

## மிதிவெடி அகற்றியவர் படுகாயம்

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தவர் மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் ஹலோ றெஸ்ட் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் கடமையாற்றும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த பூ.றகுதாஸ் என்பவரே படுகாயமடைந்தவராவார். நேற்று உடுவில் விளாத் தியடிப் பகுதியில் தனது பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது (ந-7)

---

## செய்தியாளர்...

களை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் அத்தியட்சகர் உறுதியளித்தார்.

இதேவேளை கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப்பிலும் செயதியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதேவேளை ஊடகவியலாளர்கள் கடந்த 12-ம் திகதி யாழ். கணகாணிப்புக் குழு அலுவலகம் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பத்திரிகையாளர் மீதான தாக்குதலைத் தடுக்க முடியாவிட்டால் கண்காணிப்புக் குழுவை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறுமாறு ஊடகவியலாளர்

## சிஹல உறுமய...

கொண்டனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கும் இராணுவ உயர் அதிகாரிகளுக்குமிடையில் சுரங்கல் இராணுவ முகாம் பகுதியில் பலத்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டதையடுத்து இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் சிஹல உறுமயக் கட்சித் தலைவர்களுக்குமிடையில் சமரசப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இப் பேச்சுவார்த்தையையடுத்து எம்மால் மேற்கொள்ளப்படவுள்ள இது போன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம் என்றும் கூறி ஆர்ப்பாட்டப் பேரணியில் கலநதுகொண்டவர்கள் தமது குரங்குபாஞ்சான் முகாம் பகுதியை நோக்கிய ஆர்ப்பாட்டப் பேரணியைக் கைவிட்டுக் கொழும்பு திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

---

## பொலிஸ்மா...

அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த இரண்டரை வருடங்களாக சேவையாற்றி வந்த பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தினை மேலும் ஒரு வருடம் நீடிக்குமாறு அரசாங்கம் ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருந்த போதிலும் ஜனாதிபதி அதனை நிராகரித்தமை தமிழினத்துக்குச் செய்த துரோகமாகும்.

உயர்பதவிகளில் உள்ள தமிழா களை இவ்வாறான செயற்பாடு மூலம் ஜனாதிபதி இல்லாதொழிக்க முயல்கிறார் என்றும் அமைச்சர் அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தியுள்ளார். (ந.5)

---

கோரியமை கவலைக்குரியதெனவும், தமது கண்காணிப்புப் பணி புரிந்துணர்வு உடன்படிக்கையோடு மட்டுமே தொடர்புபட்டதெனவும், கண்காணிப்புக்குழுத் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதேவேளை செய்தியாளர்கள் தாக்கப்பட்டமை மற்றும் இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் மேன்மேலும் தொடராமல் தடுத்தல் போன்ற விடயங்களில் உரிய தரப்புடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதெனவும் உறுதியளித்தனர். (ந)

# 1972-ல் தமிழர் விடுதலைக்...

தெரிவித்திருப்பதாவது.

தமிழரசுக்கட்சிக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் இடம் பெற்ற கூட்டம் எனக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. 1972-ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பித்த பின்னர் தமிழரசுக் கட்சி இயங்கவே இல்லை. தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஒன்றிணைந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியை நிறுவியது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பிளவு, பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுவதை ஏற்க முடியாது. இது வெறும் கற்பனைக் கதையாகும். தலைமைத்துவத்திற்கும் உறுப்பினர்களுக்கும் இடையில் எத்தகைய கருத்து முரண்பாடுகளும் இல்லை 36 ஆயிரம் வாக்குகளைப் பெற்றே நான் பாராளுமன்றம் தெரிவானேன். கடந்த ஜுலை மாதம் 6-ம் திகதி மத்திய குழு கூடிய போது என்மீது நம்பிக்கையில்லாது போனால் நான் வெளியேறுகிறேன் என்று கூறிய என்மீது நம்பிக்கையிருப்பதாக மத்திய குழு தெரிவித்துள்ளது.

எனது வெளிநாட்டுப் பயணம் முக்கியமான நாடுகளை மையமாக வைத்தே மேற்கொள்கிறேன். கூட்டணிக் கட்சிக் கூட்டங்களில் நான் கலந்து கொள்ளாதிருந்தது கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எனக்கு நம்பிக்கையில்லை. இதனால்தான் அதன் கூட்டங்களில் நான் கலந்து கொள்வதில்லை. அதில் இருந்து நான் ஒதுங்கியுள்ளேன். தமிழீழ விடுதலைப் புலிகள் கூட்டங்களுக்கு என்னை அழைப்பதில்லை. அதனால் நான் போவதில்லை.

இலங்கைக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது ஒவ்வொரு இலங்கையனும் இந்தியாவுக்கு மாறுபட்டவனாக இருக்க முடியாது. இந்தியாவின் அனுசரணை எமக்குத் தேவை எந்த நேரத்திலும் ஓடி வரக் கூடிய நாடு இந்தியாதான் என்பதை நாம் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியா தீர்வு முயற்சிகளில் கலந்து கொள்ளாமைக்குரிய காரணம் எதிர்க் கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே ஒருவருக்கொருவர் மீது உள்ள பயமேயாகும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் எவரிடமும் முட்டி மோதவில்லை என்னுடன்தான் அவர்கள் முட்டி மோதுகிறார்கள். அவர்கள் சுமத்தும் குற்றச்சாட்டுகளுக்கு நான் தகுந்த பதிலளித்து வருகிறேன். ஒரு கட்சித் தலைவர் என்ற முறையில் மக்கள் படும் துன்பங்களை கண்டு மனம் வருந்துகின்றேன் என்று அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். (ம)

---

## சமாதான...

அவர்கள் இருவரையும் உடனடியாகக் கண்டிக்கு அழைத்து இது தொடர்பாக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன் என்று கூறிய அஸ்கரிய பீடாதிபதி சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜே.வி.பி எடுத்துவரும் எதிர்ப்பு நடவடிக்கையைப் பாராட்டியுள்ளார்.

இது இவ்வாறிருக்க அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பிக்குகள் முன்னணி, தேசாபிமான தேசிய இயக்கம் மற்றும் இனவாதக் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பனவும் அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் அரசின் போக்கை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர்கள் செயலில் இறங்கி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுவடைந்து வருவதும் சமாதான முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவதுமே அஸ்கிரிய பீடாதிபதியினால் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகளுக்கு காரணமென்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

---

## கனேடிய...

அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் அதனையே தான் விரும்புவதாகத் தெரிவித்த பில்கிரஹெம் விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்திக்கும் நோக்கம் தமக்கு இல்லையென்றும் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (இ)


தீபாவளி பண்டிகையை முன்னிட்டு,

அதிரடித் தள்ளுபடி

5% - 25% விசேட விற்பனைகள்

- விலைக் கழிவுகள், சலுகைகள்
- ஒன்றை வாங்கி மற்றையதை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
- எங்கும் இல்லாத குறைந்த விலையில் தரமான பொருட்கள் ஒரே கூரையின் கீழ் பெற்றிட......

விரையுங்கள்! விரையுங்கள்!! இன்றே......

தினசரி, பண்டிகைத் தேவைகளுக்கு எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்

1வது முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டது

- மளிகைப்பொருட்கள்.
- வெளிநாட்டு பழ வகைகள்.
- ஐஸ் கிறீம் வகைகள்.
- மருந்து, பால்மா வகைகள்.
- தங்க நகை ஆபரணங்கள்.
- சிகை அலங்காரப் பொருட்கள்.
- வாசனைப் பொருட்கள் (சென்ற்).
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்.
- அன்பளிப்புப் பொருட்கள்.
- கவரிங், அழகுசாதனப் பொருட்கள்.
- இலத்திரனியல் பொருட்கள்.
- இன்னும் பல பல ..........



ஒரு தடவை விஜயம் செய்து பாருங்கள் மீண்டும், மீண்டும் வரத்தூண்டும்..... C/6745

Annai Nagaa Food City For all your daily needs

அன்னை நாகா புட் சிற்றி

175, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

Tel : 021 – 222 5515
Fax : 021 – 222 5223


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.